அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



# ஆண்டறிக்கை 2014

சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு

# ஆண்டறிக்கை
# 2014

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



Composed by : Dulini Wijesuriya
Type Setting by: Nirosha Warakulasooriya
Designed & Printed by : Printec Establishment / 011 2 815 816

# எமது எதிர்காலம்

## நோக்கு

நாட்டின் நம்பிக்கையை வென்ற பெறுமதிமிக்க அரிமரம் மற்றும் மரத்தாலான பொருட்களை வழங்குவோனாக இருத்தல் மற்றும் அரிமரச் சந்தையில் தலைமைத்துவத்தைப் பெறல்.

## பணி

எம்மிடமுள்ள தொழில்நுட்ப அறிவு,புகழ், தேர்ச்சி ஆகியவற்றைப் பயன்படுத்தி சட்டரீதியாக சூழல் நேயமிக்க வகையில் நாட்டின் தேவைக்கேற்ப எமது வாடிக்கையாளரின் அரிமர மற்றும் மரத்தாலான பொருட்களுக்கான கேள்வியைப் பு'ர்த்தி செய்யும் விதத்தில் உற்பத்தி செய்து பெற்றுக் கொடுத்தல்.




நாங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஆவோம்.

தடைகளை வெற்றிகொண்டு
எழுந்து நிற்கும்
ஒவ்வொரு கணமும்,
நேர்மையான அர்ப்பணிப்பு
மற்றும் நவீனமயப்படுத்தல் மூலம்
நாம் வெற்றியை நோக்கி
அடிவைக்கின்றோம்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஆரம்பம - இன்று | 06-07 |
| எல்லா விதத்திலும் எமது அதி சிறந்த அர்ப்பணிப்பினை வழங்குவதனால் நாம் சன்மானத்திற்கு உரியவர்களாவோம் | 08 |
| நிதிக்கூற்றுக்களின் முக்கிய பதிவுகள | 09 |
| நிறுவனத் தகவல்கள் 2014 | 10 |
| முகாமைத்துவக் குழு - 2014 | 11-13 |
| தலைவரின் மீளாய்வு | 14-15 |
| பொது முகாமையாளரின் மீளாய்வு | 16-17 |
| எமது பொறுப்புக்கள | 18 |
| எமது வர்த்தகப | 19 |
| பணிப்பாளர் சபை - 2014 | 20-21 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு - 2014 | 22-23 |
| 2014ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபை மீளாய்வு | 24-33 |
| அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டியின் அறிக்கை 2014 | 34 |
| நிதி மற்றும் உற்பத்திச் செயலாற்றுகை | 35-38 |
| பத்தாண்டு கால தகவல்கள் | 39 |
| தேசிய பொருளாதாரத்திற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு | 40-43 |
| நிறுவனஞ்சார் நிர்வாகம | 44-51 |
| நீடித்து நிலைக்கும் எதிர்காலத்திற்காக | 52-61 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 62-81 |
| வருடாந்த கணக்குகள | 82-107 |
| நிதிக் கலைச்சொற்கள் | 108 |






## ஆரம்பம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்குரிய வர்த்த நிறுவனமொன்றாகும். அது 1968ஆம் அண்டில் காணி, நீர்ப்பாசன மற்றும் மின்வலு அமைச்சரினால் 1957இன் இல 49ஐக் கொண்ட அரசாங்கக் கைத்தொழல் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டதுடன், 1982 பெப்ரவரி மாதம் 05 ஆந் திகதிய இல 178/10ஐக் கொண்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2009ஆம் ஆண்டு யு‘ன் 26 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் மேலும் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆரம்ப மூலதனம் 2.5 மில்லியன் ரூபாவாகும்.

## இன்று

அதன் தலைமை அலுவலகம் பத்தரமுல்லை, சம்பத்பாயாவில் அமைந்துள்ளதுடன், பிராந்திய அலகுகள் நாட்டின் எல்லா பிரதேசங்களிலும் அமைந்துள்ளன. அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் முக்கிய வருமான மூலமானது அரிமரம் மற்றும் மர உற்பத்திகள் ஆகியவற்றின் விற்பனையாவதுடன், வளம்மிகு அறுவடைக்காக அரசாங்க மரக்கூட்டுத்தாபனம், வன பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து வளம்மிகு வன நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துகின்றது.

அதி உயர் தரத்தில் மர உற்பத்திகளையும் சிறந்த சேவையினையும் வழங்குவதற்கு நாம் எப்போதும் முயற்சிப்பதுடன், 46 வருட காரமாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரம் மற்றும் மர உற்பத்தித் துறையில் உயர்ந்த நிலையினை அடைவதற்கு இது காரணமாக அமைந்ததுடன், உயர் தர உற்பத்திகளை மதிப்பீடு செய்கையில் எமது உற்பத்திகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அங்கமாக பாவனையில் உள்ளது.

## எல்லா விதத்திலும் எமது அதி சிறந்த அர்ப்பணிப்பினை வழங்குவதனால் நாம் சன்மானத்திற்கு உரியவர்களாவோம்.



தேசிய வணிக சபையினால் நடத்தப்பட்ட 2014 வியாபார சிறப்பு விருது வைபவத்தின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் வெள்ளி விருதினைச் சுவீகரித்துக் கொண்டது.

தேசிய வணிக சபையினால் நடத்தப்பட்ட 2013 வியாபார சிறப்பு விருது வைபவத்தின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் சிறப்புத் தேர்ச்சி விருதினைச் சுவீகரித்துக் கொண்டது.


















2009 2010 2011

தேசிய வணிக சபையினால் வழங்கப்படும் தங்கச் சன்மானங்களைத் தொடர்ச்சியாக 2009, 2010, 2011 ஆகிய வருடங்களில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுவீகரித்துக் கொண்டது.





- ஹரித்த மெக்கோ விருது 2008 - இலங்கை ஊடகவியலாளர் சங்கம்
- வன மற்றும் சுற்றாடல் கல்விக்கு வழங்கிய பங்களிப்பிற்காக பாரம்பரிய மற்றும் மதிப்பீட்டு மெக்கோ விருது 2010
- 2009 தேசத்தின் மகுடம் கண்காட்சியின் போது மிகவும் ஆக்கபு'ர்வமான கண்காட்சிக் கூடம்





# நிதிக்கூற்றுக்களின் முக்கிய பதிவுகள்


| டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் | | 2014 | 2013 | வித்தியாசம % |
|---|---|---|---|---|
| இலாபம் | ரூ .000 | 3,473,847 | 2,893,749 | 20% |
| திறைசேரிக்கு செலுத்திய வரி | ரூ .000 | 427,222 | 382,337 | 12% |
| வருமான வரி | ரூ .000 | 25,000 | 50,000 | -50% |
| வருடத்திற்கான தேறிய இலாபம் | ரூ .000 | 196,225 | 150,223 | 31% |
| உரிமைப்பங்கு மீதான ஈட்டல்கள் | ரூ .000 | 205,998 | 182,114 | 13% |
| சொத்துக்கள் மீதான ஈட்டல்கள் | % | 11.92 | 11.32 | 5% |
| ஐந்தொகை தொடர்பான முக்கிய தரவுகள் மற்றும் வீதம் | % | 7.55 | 7.94 | -5% |
| மொத்த சொத்துக்கள் | | | | |
| மொத்த உரிமைப் பங்கு | ரூ .000 | 5,659,768 | 4,812,312 | 18% |
| மொத்த படுகடன்கள் | ரூ .000 | 3,583,129 | 3,377,223 | 6% |
| கடன்;உரிமைப் பங்குகள் | ரூ .000 | 2,076,640 | 1,435,089 | 45% |
| கடன்;மொத்த சொத்துக்கள் | % | 57.96 | 42.49 | 36% |
| வேறு தகவல்கள் | % | 36.69 | 29.82 | 23% |
| மொத்த ஊழியர்கள் | | | | |
| ஊழியர் ஒருவரின் வருவாய் | எண். | 2,186 | 2,139 | 2% |
| ஊழியர் ஒருவருக்கான இலாபம் | ரூ .000 | 1,589 | 1,353 | 17% |
| (திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன்) | ரூ .000 | 195 | 179 | 9% |



# நிறுவனத் தகவல்கள் 2014

கௌரவ சுசில் பிரேமஜயந்த - சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்
கௌரவ அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். அப்துல் காதர் - பிரதிச் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்
கலாநிதி பீ.எம்.யு'.டீ. பஸ்நாயக்க - செயலாளர்- சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு

## பணிப்பாளர் சபை

திரு எஸ். அமரசிங்க - தலைவர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
திரு கோசல ஹெட்டிஆரச்சி - செயற்படு பணிப்பாளர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
திரு ஏ.கே.ஏ.வை. தரங்க - பணிப்பாளர் (திறைசேரி பிரதிநிதி)
திரு எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க - பணிப்பாளர் (வனப் பாதுகாப்பு ஜெனரால்)
திரு. டப்ளியு'.எம். விஜேரத்ன - பணிப்பாளர்
பேராசிரியர் ஹிரான் அமரசேக்கர - பணிப்பாளர்
திருமதி. மேரி டிக்மன் - பணிப்பாளர்

## திரு பி.ஜீ. குமாரசிங்க சிரிசேன

பொது முகாமையாளர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி

திரு ஏ.கே.ஏ.வை. தரங்க - கமிட்டி தலைவர்
திரு எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க - கமிட்டி உறுப்பினர்
பேராசிரியர் ஹிரான் அமரசேக்கர - கமிட்டி உறுப்பினர

## கணக்காய்வு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் திணைக்களம்
306;72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

## தலைமை அலுவலகம் (பதியப்பட்ட விலாசம்)

82, - சம்பத்பாயபூ
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை
இலங்கை.

## பிரதான வங்கியாளர்கள்

இலங்கை வங்கி

## நிதி ஆண்டு

ஜனவரி 01ஆந் திகதி முதல் டிசம்பர் 31ஆந் திகதி வரை

தொலைபேசி + 94 112 866600 -5
தொலைநகல் + 94 112 866623
இணையத்தளம் www.timco.lk



# முகாமைத்துவக் குழு - 2014

பொது முகாமையாளர் : பீ.ஜீ. குமாரசிங்க சிரிசேன
Bsc. Mgt (SP), Master of Management (HRM), Master of Business Administration, Post Graduate (A&FM), MIOGAF, FMAAT
Dip. Business management, APFA (ICA)

**பிரதிப் பொது முகாமையாளர்கள்**

| | | |
|---|---|---|
| பி. பொது முகாமையாளர் - மானிட வளங்கள், நிர்வாகம | : கே. சிரினிவங்ஷ | Bsc., Msc. (Forestry), Dip.(Bus. mgt),Post Grad. Dip. (Forest survey-Netherland),Dip. (Forest products research-Japan) |
| பி. பொது முகாமையாளர் - இயக்குதல | : எச்.பீ.எஸ. நவரத்ன | Bsc., M.Sc (Forestry), Pg Dip in forestry for Rural Mgt. (Netherland) |
| பி. பொது முகாமையாளர் - வினியோகம | : ஜீ.சேனானாயக்கா | BA. (Econ. /Stat.) Spld - Wood Industry-CSR – REMINI in Italy |
| பி. பொது முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம் | : டீ.யு'. தயாரத்ன | Bsc. Msc.(Com. Sc) |
| பி. பொது முகாமையாளர் - ஆய்வு,பயிற்சி,அபிவிருத்தி | : கலாநிதி என்.ருவன்பத்திரண | Bsc. Msc. PhD. (Forestry) |
| பி. பொது முகாமையாளர் - உற்பத்தி, தொழில்நுட்பம் | : எச்.எம்.ஜீ.பி. ஹேரத | NDT (Mech.) ,ECGI(UK),MIIESL, Post Grad.Dip. (Mech. Wood Tech. & Prod. Mgt. -Finland) |
| பி. பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு | : டப்ளியு'.டப்ளியு'.எம்.ஜே. குரே | FCA |
| பி. பொது முகாமையாளர் - நிதி | : ஜீ.டீ.எஸ். குமாரசிங்க | Bsc. (Acct. Fin. Mgt.), MBA, ACA, ACMA |

**உதவிப் பொது முகாமையாளர்கள்**

| | | |
|---|---|---|
| உ. பொது முகாமையாளர் - பிராந்தியம் 1 | : எஸ்.எஸ். பண்டுவாவல | Bsc.,Msc. (Forestry), Post Grad. Dip.(Forest survey- Netherland), Post Grad. Dip. (Mech.Wood Tech. & Prod. Mgt. - Finland) |
| உ.பொது முகாமையாளர் - இயந்திரப் பொறியியலாளர | :டீ.எஸ். சமரகோன | MIE (SL), C. Eng, NDT (Mec) |
| உ.பொது முகாமையாளர் - உற்பத்தி | : ரீ.எஸ்சீ. புஷ்பகுமார | Bsc.Post Grad.Dip. (Mech.Wood Tech. & Prod.Mgt) in Finland |
| உ.பொது முகாமையாளர் - பிராந்தியம் 111 | : பி.பி.ஆர். சமரவீர | Bsc. Msc. (Forestry) |

### முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| முகாமையாளர் - அரிமர வழங்கல் | : எம்.சீ. தேவேந்திர | Bsc., Msc (Forestry) |
| முகாமையாளர் - நிதி | : ஆர்.ஏ. தயானந்த | Dip. (FA) |
| முகாமையாளர் - நிதி | : டீ. விக்கிரமசிங்க | H.N.D.A., Post Grad. Dip. in Finance (India)-1st Class, Member A.A.T., Member U.K.A.P. |
| முகாமையாளர் - நிதி | : ஆர்.எம்.ரத்னபால | ICASL (L), Higher Dip. (Accountancy) |
| முகாமையாளர் - சட்ட மற்றும் நிர்வாக | : ஈ.ஜீ.எச்.குலரத்ன | Dip in English, Dip Forestry, Dip in Mgt., PgD LRHRM, ACPM |
| முகாமையாளர் - மனித வள | : ஈ.ஏ.டீ.எஸ்.ஏ. அமரசிங்க | |
| முகாமையாளர் - உற்பத்தி | : கலாநிதி எம்.ஜீ.எம். தாரிக | Bsc, Msc, Phd. |
| முகாமையாளர் - கொள்வனவு செய்தல், கப்பலேற்றல | : அருண டி சில்வா | |
| முகாமையாளர் - ஆய்வு மற்றும் பயிற்ச | : சீ.கே. முத்துமால | Bsc (Agric.)Hons. Msc (Forestry) |
| முகாமையாளர் - விசாரணை | : ஈ.ஜீ. திலக்கரத்ன | |
| முகாமையாளர் - அரிவாலைகள் | : எச்.பீ. சமந்த | Bsc, Msc (Forestry), National Dip in Teaching |
| முகாமையாளர் - மீள் வனநடுகை | : ஏ.பி. ரத்னசூரிய | |
| முகாமையாளர் - விசேட செயற்றிட்டம் | : ஏ.என்.டப்ளியு'.ஏ. ஆனந்த | |
| முகாமையாளர் - தளபாட பொறிகூடம | : எம்.கே.டப்ளியு'. திசாநாயக்க | B.com, Post Grad. Dip in International Affairs |
| | : ஜே.ஜீ. திசர கமகே | Bsc |
| முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம் | : ஏ.ஜீ. மாதுவகே | |
| முகாமையாளர் - அரமரத் தரப்படுத்துகை | : வை.பீ.எம். அமீர் | Dip in Forestry |
| முகாமையாளர் - வன குற்றங்கள் | : டப்ளியு'.ஐ. சாரங்க | Bsc (Hons) |

### பிராந்திய முகாமையாளர்கள

| | | |
|---|---|---|
| பி. முகாமையாளர் - மின்னேரியா | : ஆர். எதிரிசிங்க | |
| பி. முகாமையாளர் - பண்டாரவளை | : ஜீ.கே. அஜித் சந்தன | Bsc. |
| பி. முகாமையாளர் - கொழும்பு | : டப்ளியு'. கீர்த்தி ரோய் | |
| பி. முகாமையாளர் - அனுராதபுரம் | : யு'.எஸ்.எம். பெர்னாண்டோ | BA (Sp.) |
| பி. முகாமையாளர் - இரத்தினபுரி | : எச்.பீ. ரஜவத்த | BA |
| பி. முகாமையாளர் - நுவரெலியா | : ஜீ. குணவங்ஷ | BA (Sp.), Dip in Forestry |
| பி. முகாமையாளர் - மொணராகலை | : யு'.பி.எச். உளுவடுகே | Bsc. |
| பி. முகாமையாளர் - கண்டி | : ஈ.எம்.எஸ். ஏக்கநாயக்க | |
| பி. முகாமையாளர் - யாழ்ப்பாணம | : எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா | |
| பி. முகாமையாளர் - குருணாகலை | : ஏ. எஸ் விஜேசுந்தர | |
| பி. முகாமையாளர் - மாத்தறை | : டீ.எச். ராஜபக்ஷ | Bsc., Msc. |



| | | |
|---|---|---|
| பி. முகாமையாளர் - அம்பாறை | : எம்கே.பி. வசந்த ராஜ் | |

### தொகுதிகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| முகாமையாளர் - சிலிப்பர், மின்சார தூண்கள் கல்தமுல்லை | : டீ.எம்.நில்மிணி புஷ்பகுமார | Bsc. |
| பிராந்திய முகாமையாளர் - கெப்பெட்டிபொல | : ஏ.பீ.எம். வீரசிங்க | BA |

### பிரதி முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| பி.பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | : எச்.எம்.எஸ். மாதவ | B.com (Sp) |
| பி. முகாமையாளர் - அரிமரத் தரப்படுத்தல்;ஏலவிற்பனை | : ரீ.எச் குணதாச | |
| பி. முகாமையாளர் - பாதுகாப்பு | : சந்திம வீரமன | |
| பி. முகாமையாளர் - நிர்மாணிப்பு,தரக்கட்டுப்பாடு | : ஈ.எம்.எம். பெர்னாண்டோ | |
| தொகுதிப் பகுப்பாய்வாளர் | : டப்ளியு'.எச்.ஏ. சந்திரகுமார ஜே.எம்.எம்.பீ. ஜயசுந்தர | Bsc |

### பிரதிப் பிராந்திய முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| பி.பி. முகாமையாளர் - அனுராதபுரம் | : கே.பீசீ. ரத்னசேக்கர | BA |
| பி. பி. முகாமையாளர் - கொழும்பு | : எச்.பீ.எஸ். திஸானாயக்கா | BA |
| பி. பி. முகாமையாளர் - பண்டாரவளை | : யு'.வீ. கித்சிறி | Dip in Forestry |
| பி. பி. முகாமையாளர் - மாத்தறை | : ஆர் விஜேதுங்க<br>: எல்.எஸ். ஜயசேக்கர | Bsc. (Agri. Sp.) |
| பி. பி. முகாமையாளர் - அம்பாறை(தளபாட உற்பத்தித்தளம்) | : ஏ.சீ.ஜினேஜவூதீனஷ | |
| பி. பி. முகாமையாளர் - கண்டி | : டீ.ஜீ.சிறில்<br>ஆர்.சீ. சமன் குமார | |
| பி. பி. முகாமையாளர் - மொணராகலை | : துமிந்த நவரத்ன | |
| பி. பி. முகாமையாளர் - குருணாகலை | : ஆர்.எம்.எஸ்.கே. ரத்னாயக்கா<br>சுனில் விஜித்த பண்டார | |
| பி. பி. முகாமையாளர் - இரத்தினபுரி | : எச்.எல். நந்தன<br>எச்.ஏ. காமிணீ அல்விஸ் | |
| பி. பி. முகாமையாளர் - யாழ்ப்பாணம | : ரீ.பீ. ரமீஹ் | |
| பி. பி. முகாமையாளர் - மாத்தளை | : டீ.எல். அபேநயக்கா | |
| பி. பி. முகாமையாளர் - கல்தேமுல்லை | : என்.ஜீ. நிகாலரீ.எஸ். ரூப்பசிங்க | |
| பி. பி. முகாமையாளர் - மின்னேரியா | : எஸ்.சீ. ஜயமான்ன | |
| பி. பி. முகாமையாளர் - அம்பாறை | : எம்.டீ.சமில சம்பத்<br>டீ.ஏ. ஹெந்தாவித்தாரண | |
| பி. பி. முகாமையாளர் - நுவரெலியா | : எம்.டப்ளியு'.யு'.ஜே. பியநந்தன | |



*எதிர்கால வளமான வாழ்விற்காக பொறுப்புடனும் நிலைப்பாடுடனும், ஆக்கமிக்க புது உற்பத்திகளுடனும் முதலீடு செய்வதற்கு நாம் ஆர்வமாயுள்ளோம். மேலும், பொறுப்புமிக்க பிரஜையாக மர நடுகையினை மேலும் வலுப்படுத்தவதற்கு இனங்காணப்பட்ட பாடசாலைகள் பலவற்றிற்கு பொருள் ரீதியாகவும் பண ரீதியாகவும் நன்கொடைகளை வழங்கி, கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தி, கருங்காலி போன்ற பெறுமதிமிக்க மரக்கன்றுகளைப் பாடசாலைகளுக்குப் பங்கீடு செய்து, இளஞ் சந்ததியினரின் மர நடுகைக் குறித்த ஆர்வத்தினை அதிகரிக்கும் நோக்கில் துருஜன மாணவர் வங்கி மரநடுகை செயற்படுத்தப்பட்டது.*

# தலைவரின் மீளாய்வு



அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை பெரு மகிழ்ச்சியுடன் முன்வைக்கின்றேன்.

2013ஆம் ஆண்டின் 7.2% ஆன உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2014ஆம் ஆண்டில் 7.4% ஆன உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியினை அடைந்துகொள்வதற்கு தேசிய பொருளாதாரத்தினால் முடிந்துள்ளது. உள்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்காகத் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் நாட்டின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பினை வழங்கியுள்ளது என்பது தெளிவாகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 57.6% இனைப் பிரதிநிதிப்படுத்தும் சேவைகள் பிரிவு 2013ஆம் ஆண்டின் 6.4% உடன் ஒப்பிடுகையில் 2014ஆம் ஆண்டில் 6.5% இனால் வளர்ச்சியடைந்துள்ளதுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 32.3% இனைப் பிரதிநிதிப்படுத்தும் கைத்தொழில் பிரிவு 2013ஆம் ஆண்டின் 9.9% உடன் ஒப்பிடுகையில் 2014ஆம் ஆண்டில் 11.4% இனால் வளர்ச்சியடைந்துள்ளமையைக் காட்டுகின்றது. கடந்த வருடந்தின் 4.7% உடன் ஒப்பிடுகையில் விவசாயப் பிரிவு 0.3% வளர்ச்சியினைக் காட்டுகின்றது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையினைக் கடுமையாகப் பாதிக்கும் காரணிகளுள் ஒன்றான முகாமைத்துவம் தொடர்பான பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் ஊயிரியல் விஞ்ஞான ரீதியான பின்னணியினைப் புரிந்து கொள்வதும், அப்பிரிவினைச் சமநிலைப் படுத்தவதும் அபாயமானதும் சவால்மிக்கதுமான காரியமாகும். அரிமர மற்றும் அரிமரஞ்சார் பொருட்களுக்கு உள்ள உயர் கேள்வியின் காரணமாக சட்டரீதியற்ற முறையில் காடழிப்பினை மேற்கொள்ளும் இக்காலகட்டத்தில் முறையான முகாமையின் மூலம் மாத்திரமே வனவளங்களை எதிர்கால பரம்பரையினரின் தேவைகளுக்காக பாதுகாக்க முடிகின்றது. பேண்தகு அரிமர விளைச்சலை அறுவடைசெய்தல் காடழிப்பிற்கு ஏதுவாக மாட்டாது. அதாவது, அரிமர விளைச்சலை அறுவடை செய்யும் பொது வன பயிர்ச்சிய்கை நிலத்தில் உற்பத்தி ஆற்றலைப் பாதுகாக்கும் விதத்தில் மிகவும் முறையான மற்றும் விஞ்ஞான ரீதியில் செயற்படுவதனாலும் முதிர்ந்த மரங்களுக்குப் பதிலாக முதிய மரங்களை நட்டி, புதிய வன பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சமூகத்திற்கு நீண்ட கால நலன்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முடிகிறது. எவ்வாறெனினும், மரம் என்பது நிலையாக இருக்கக்கூடிய ஒரு உயிர் அன்று. ஏதேனும் சந்தர்ப்பத்தில் முதரிச்சியடைந்த மரங்கள் உக்கிப் போய், அதற்குப் பதிலாக வேகமாக வளரும் இளம் மரங்கள் இந்நிலத்தினை ஆக்கிரமிப்பதன் மூலம் இயற்கையாகவே முதர்ச்சியடைந்த மரங்கள் இறந்து அதற்குப் பதிலாக புதிய மரங்களின் மீள் நடுகை நடைபெறுகின்றது. இவ்வாறான பின்னணியில், எமது கூட்டுத்தாபனம் 3,474 மி.ரூ. மொத்த விற்பனையாக ஈட்டியுள்ளதுடன், அது கடந்த வருடத்தில் 2,894 மி.ரூபாவாக இருந்தது. புது விற்பனை மற்றும் உற்பத்தி உபாயங்களை மேற்கொண்டமை இவ்வளர்ச்சிக்கு பெரிதும் வழிகோலியன. கடந்த வருடத்தின் 124 மி.ரூபா நடைமுறை செயற்படு இலாபத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் 204 மி.ரூபா செயற்படு இலாபத்தினை ஈட்டியுள்ளது. வருமான வரி, மற்றும் விசேட வரிக்கு மன்னரான தேறிய இலாபம் இவ்வருடத்தில் 427 மி.ரூபாவாக உள்ளதுடன், கடந்த வருடத்தில் அது 382 மி.ரூபா எனப் பதியப்பட்டுள்ளது. கடந்த வருடத்தின் 182 மி.ரூபா வரிக்குப் பின்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் 206 மி.ரூபா வரிக்குப் பின்னரான இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. 1,396 மி.ரூ. உரிமைப்பங்கு, செயற்படு வரி, திறைசேரிக்குச் செலுத்திய விசேட வரி என அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடந்த வருடத்தைப் போன்றே எமது கூட்டுத்தாபனத்தின் மனித வளப் பயிற்சி மற்றும் தொழிற்சார் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் மூலம் ஆற்றல்கள் மற்றும் திறன்களை மேலும் விருத்தி செய்து வாடிக்கையாளருக்கு கூடிய வினைத்திறனுடனும் உச்ச அளவில் சேவைகளை வழங்குவதற்கும் நிறுவனத்தின் இலக்குகளைப் பு'ர்த்தி செய்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் எப்போதும் கூட்டுத்தாபனத்தின் எல்லா பிரிவுகளிலும் நல்ல நிர்வாகத்தினையும் மிகவும் நல்ல செயற்பாடுகளுக்கு அமைய செயற்படுவதற்கும் முயற்சிக்கின்றது. எமது வெற்றிக்குச் சான்றாக, தெவ ஜவயட்ட நவ ஜவயக்பூ என்ற தொனிப்பொருளை வலுப்படுத்தியவாறு, அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இவ்வருடத்தில் தேசிய வியாபார அதிசிறந்த விருதுகள் வழங்கும் வைபவத்தில் மிண்டும் ஒரு முறை வெள்ளி விருதினைச் சுவீகரித்துக் கொண்டது. எதிர்கால வளமான வாழ்விற்காக பொறுப்புடனும் நிலைப்பாடுடனும், ஆக்கமிக்க புது உற்பத்திகளுடனும் முதலீடு செய்வதற்கு நாம் ஆர்வமாயுள்ளோம். மேலும், பொறுப்புமிக்க பிரஜையாக மர நடுகையினை மேலும் வலுப்படுத்தவதற்கு இனங்காணப்பட்ட பாடசாலைகள் பலவற்றிற்கு பொருள் ரீதியாகவும் பண ரீதியாகவும் நன்கொடைகளை வழங்கி, கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தி, கருங்காலி போன்ற பெறுமதிமிக்க மரக்கன்றுகளைப் பாடசாலைகளுக்குப் பங்கீடு செய்து, இளஞ் சந்ததியினரின் மர நடுகைக் குறித்த ஆர்வத்தினை அதிகரிக்கும் நோக்கில் துருஜன மாணவர் வங்கி மரநடுகை செயற்படுத்தப்பட்டது. மேலும், தெயட்ட செவண, தேசிய மரநடுகை நிகழ்ச்சிக்காக 88,000 சிறிய கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அரிமர மற்றும் அரிமரஞ்சார் பொருட்களுக்கான எதிர்கால கேள்வியினைப் பு'ர்திசெய்யும் பொருட்டு எமது கூட்டுத்தாபனம் ஏற்கனவே பொருளாதார நன்மைகளை நோக்காகக் கொண்டு வன பயிரிச்செய்கை நிகழ்ச்சிகளை ஆரம்பித்துள்ளது. அன்றாட குப்பைகளை அகற்றும் போது அவற்றை கடதாசி, பொலித்தீன், சேதனப் பொருட்கள் என வகைப்படுத்தி அகற்றுவதற்கு கவனத்திற் கொண்டுள்ளோம். மேலும், சமூகத்தினரிடையே மரப் பாவனை தொடர்பில் உள்ள கருத்து வேறுபாடுகளை இல்லாதொழிக்கும் நோக்குடன் குளியாபிட்டி- தேசத்தின் மகுடம் கண்காட்சியின் போது கடும் முயற்சியுடன் செயற்பட்டோம்.

பணிப்பாளர் சபை சார்பாக கௌரவ சுற்றாடல் மற்றும் புதுப்பிககத்தக்க சக்தி அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும், அதன் பணிக்குழாதினருக்கும், வனப் பாதுகாப்பு தலைமை அதிபதி அவர்கள் மற்றும் அத்திணைக்களத்துடன் இணைந்துள் எல்லா பணிக் குழாத்தினருக்கும், ஏனைய சகல அரசாங்க எத்தியொகத்தர்களுக்கும் எமக்கு வழங்கிய பாரிய ஆதரவிற்கு நன்றிகளை மணப்பு'ர்வமாகத் தெரிவிக்கின்றென். பல்வேறு கஷடங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் எமது பொது முகாமையாளர் உட்பட பணிக்குழாத்தினர் அவர்களது ஆற்றல் மற்றும் நிபுணத்துவ அறிவைப் பயன்படுத்தி கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையை உயர்ந்த மட்டத்திற்கு இட்டுச் செல்வதற்கு எடுத்தக் கொண்ட பாராட்டுதலுக்குரிய முயற்சிகளுக்காக எமது விசேட நன்றிகளை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

2015ஆம் வருடம் மிகவும் எளிதான வருடமாக நாம் எதிர்பார்க்காவிடினும், குறுகிய கால சவால்களைச் சளைக்காது முகங்கொடுத்து எப்போதும் நீண்ட கால சவால்களை எதிர் கொண்டு, எதிர்பார்க்கும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு எமது ஆற்றல்களை உச்ச அளவில் பயன்படுத்தி மிகச் சிறந்த பெறுபேற்றினை அடைவதற்கு அர்ப்பணிப்புடன பணிபுரிய கடப்பாடு கொண்டுள்ளோம்.

எஸ். அமரசிங்க
தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



# பொது முகாமையாளரின் மீளாய்வு

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை முன்வைக்க முடிவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் நாட்டின் நம்பிக்கையை வென்ற அரிமரம் மற்றும் மர உற்பத்திகளை வழங்குவதில் சந்தையில் உண்மையான தலைமைத்துவத்தினைப் பெற்றுள்ளது. நாடு முழுதும் வியாபித்திருக்கும் 12 பிராந்திய அலுவலகங்களுடன், 54 விற்பனை நிலையங்கள், 200இற்கும் மேற்பட்ட மரங்களை வெட்டுதல் மேற்கொள்ளும் செயற்படு வேலைத்தளங்கள் மற்றும் மரங்களை பதப்படுத்தும் மற்றும் பரிகரிக்கும் பொறித் தொகுதிகள் ஆகியவற்றினைக் கொண்ட தளபாட உற்பத்தி நிலையங்கள் 03 மற்றும் 06 காட்சியறைகள் ஆகியவற்றை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது.

2014ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை 7.4% சாதகமான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியினை அடைந்து கொண்டுள்ளதுடன், அவ்வருடம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு விசேடமானதொரு வருடமாகும். இலங்கை அரசு நீண்டகாலமாக நீடித்து நிலைக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியினை அடைந்து கொள்ளும் நோக்கில் நாடு முழுதும் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு பெரும் முயற்சியில் ஈடுபடுகின்றது. வர்த்தகக் கண்ணோக்கில் பார்க்கும் போது அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கு எம்மால் இருக்கும் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமாக செயற்படு நடவடிக்கைகளில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச சந்தை நடைபெறும் சந்தர்ப்பங்கள் குறித்தும் கவனத்தைச் செலுத்துவதுடன் மரக் கூட்டுத்தாபனத்தின் வருமானத்தை உயர்த்துவதற்கு தேவையான வழிமுறைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. 2014ஆம் ஆண்டில் நீடித்த மற்றும் இலாபகரமிக்க வர்த்தகமாக வெற்றியினை அடைந்து கொள்வதற்கு நாடு முழுதும் கிளைகளை விஸ்தீரணப்படுத்தியும், விருப்புள்ள தரப்பினரிடையே நன்கு ஒத்துழைப்புடன் பணி வேலை செய்வதற்கும் பொருட்களில் பலவிதத்தன்மை மற்றும் நவீன தொழில்நுட்பமும் வழிகோலியன எனலாம்.

இவ்வருடத்தில் எமது கூட்டுத்தாபனம் 427 மி.ரூபா வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை ஈட்டியுள்ளதுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12% அதிகரிப்பாகும். 2,894 மி.ரூபா கடந்த வருடத்தின் விற்பனை வருமானத்துடன் ஒப்பிடுகையில் அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் இவ்வருடம் 3,474 மி.ரூபா விற்பனை வருமானத்தை ஈட்டியுள்ளது. அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 20% அதிகரிப்பாகும். அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் 206 மி.ரூபா வரிக்குப் பின்னரான தேறிய இலாபத்தினை ஈட்டியுள்ளதுடன், அது தேசிய பொருளாதாரத்திற்கு 1,396 மி.ரூ. பங்களிப்பினை வழங்குகின்றது.

எமது உயர்ந்த உற்பத்தி நியமங்களை மென்மேலும் உறுதிப்படுத்தியவாறு 2014ஆம் நிதி ஆண்டின் பொது, நாம் அடைந்துகொண்ட குறிப்பிடத்தக்க வெற்றியினைக் குறித்து இங்கு குறிப்பிடுவதில் பெருமிதம் அடைகின்றேன். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிப்பினை வழங்கியபடி, சிறந்த முறையில் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் வியாபார நிறுவனத்தினை இனங்காண்பதற்காக இலங்கை தேசிய வர்த்தகச் சபையினால் நடாத்தப்பட்ட 2014 தேசிய வர்த்தகச் சிறப்பு விருது வழங்கும் வைபவத்தில் அரசாங்க உற்பத்திப் பிரிவிற்கு உரிய வெள்ளி விருதினை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுவீகரித்துக் கொண்டது. மேலும் எமது நிலைப்பாட்டிற்காக மாத்திரம் அல்லாது, எமது எதிர்கால சந்ததியினருக்காக சுற்றாடல் குறித்து கவனஞ் செலுத்தும் மற்றும் பொறுப்புடைமையின் அவசியத்தை இனங்கண்டு “தேசத்திற்கு நிழல்பூ (தெயட்ட செவண) தேசிய மர நடுகை நிகழ்ச்சியின் கீழ் கூட்டுத்தாபனத்திற்கு உரிய தவான்களில் நட்ட 88,000 கன்றுகள் வழங்கப்பட்டன. அவ்வாறே இளஞ் சமூகத்தினரிடையே உலக சுற்றாடல் தினத்தையொட்டி “துருஜன மாணவர் வங்கிபூ மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் பயன்மிக்கதாக தொடர்ச்சியாக இவ்வருடத்திலும் செயற்படுத்தப்பட்டது.

எமது பொருட்களின் தரத்தினைக் குறித்து இன்னும் வாடிக்கையாரிடையே பதிந்துள்ள நன்மதிப்பினைத் தொடர்ந்தும் பேணிக்கொள்வது எமது நோக்கமாகும். ஊழியர்களின் ஊக்கம் உயர்மட்டத்தில் காணப்படுவதால் மென்மேலும் உற்பத்திகளின் தரத்தினையும் விளைபயனையும்குறித்து பெரிதும் கவனத்திற் கொண்டு அதன் மூலம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தை அதன் உச்சகட்டத்திற்கு கொண்டு வருவதே எமது நோக்காகும்.






*எமது உயர்ந்த உற்பத்தி நியமங்களை மென்மேலும் உறுதிப்படுத்தியவாறு 2014ஆம் நிதி ஆண்டின் பொது, நாம் அடைந்துகொண்ட குறிப்பிடத்தக்க வெற்றியினைக் குறித்து இங்கு குறிப்பிடுவதில் பெருமிதம் அடைகின்றேன். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிப்பினை வழங்கியபடி, சிறந்த முறையில் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் வியாபார நிறுவனத்தினை இனங்காண்பதற்காக இலங்கை தேசிய வர்த்தகச் சபையினால் நடாத்தப்பட்ட 2014 தேசிய வர்த்தகச் சிறப்பு விருது வழங்கும் வைபவத்தில் அரசாங்க உற்பத்திப் பிரிவிற்கு உரிய வெள்ளி விருதினை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுவீகரித்துக் கொண்டது.*

ஈற்றில் கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டிற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர், பிரதி அமைச்சர், அமைச்சின் செயலாளர், தலைவர், செயற்படு பணிப்பாளர் ஆகியோரின் உட்பட பணிப்பாளர் சபையின் பணிகளை நான் பாராட்டுவதுடன், அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளின் வழங்குனராக தொர்ந்தும் எம்மிடம் கடும் பக்கசார்பினைக் காட்டும், எமது வெற்றிக்கு அத்திவாரமாக உள்ள வாடிக்கையாளர் நண்பர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், எமது பிணைப்பு மென்மேலும் வலுப்பெற முடியுமான உச்ச முயற்சியுடன் தாங்களுக்கு தரம் மிக்க உற்பத்திகளை வழங்குவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம்.
வெற்றிமிக்க பாதை வழியே வேகமானதும் உறுதியானதுமான பயணஞ் செல்ல சளைக்காத ஆதரவை வழங்கும் எனது முகாமைத்துவக் குழுவின் அனைத்து அன்பர்களுக்கும் என்றும் ஆர்வத்துடன் கூடிய அர்ப்பணிப்புடன் செயற்படும் 2,186க்கும் மேற்பட்ட எமது பணிக் குழாத்தினருக்கும் எனது மதிப்பிற்குரிய பாராட்டுதல்களைத் தெரிவிப்பதுடன், பல்வேறு விதத்திலும் ஆதரவினை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பி.ஜீ.குமாரசிங்க சிறிசேன
பொது முகாமையாளர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# எமது பொறுப்புக்கள்

காடுகளிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுதல், அம்மரங்களை அரிமரங்களாகவும் முடிவுப் பொருட்களாகவும் மாற்றுதல், மரக்குற்றிகள், அரிமரங்கள், முடிவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் இக்காரியங்களுக்கான காட்டுப் பாதைகளை அமைத்தல்

மரக்குற்றிகளாக்கும் நிலையங்கள், அரியும் ஆலைகள், எண்ணெய் இடுதல் மற்றும் பாதுகாப்புப் பொறித்தொகுதிகள், அரிமரங்களை உலர வைத்தல் மற்றும் உலரவைக்கும் சூளைகள், தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அமைத்தல், செயற்படுத்துதல்

அரிமர விற்பனை நிலையங்களை நடாத்துதல்

அரிமர உப பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை

அரிமரங்களை இறக்குமதி செய்தல்

புதிய காடுகளை நடும் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், மீள் நடுகைகளை மேற்கொள்ளல், காடு மற்றும் காட்டு நடுகைகளை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்

விவசாய உற்பத்திகள்

அரிமரம் தொடர்பான முடிவுப் பொருட்கள் மற்றும் அரை முடிவுப் பொருட்கள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்

தனியார் காணிகளிலிருந்து மரங்களைக் கொள்வனவு செய்தல்

காடு சார்ந்த உற்பத்திகளைப் பதனஞ் செய்தல்

பிரம்புகளை இறக்குமதி செய்தல்

மாதிரிகளைப் பரீட்சிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிமரங்களை இனங் காணல் மற்றும் அரிமரச் சான்றிதழ்களை வழங்கல்

அரிமரக் கைத்தொழில் சார்ந்த விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், சான்றிதழ்கள் வழங்குதல், சுற்றாடல் தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் முழுப் பயனையும் பெற்றுக் கொள்வதற்காகத் திட்டமிடல் மற்றும் அதற்கு முதலீடு செய்தல்



# எமது வர்த்தகப்



- சூழல் நேயம் மிகுந்த மற்றும் வர்த்தக ரீதியாக வெற்றிகரமாகச் செயற்படக்கூடிய அரசாங்கத்துறை நிறுவனமொன்றாக எமது நிலைப்பாட்டைப் பேணுவது எமது முதன்மையான பொறுப்பு என இனங்கண்டுள்ளோம்.
- சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலைப் பாதுகாப்பதற்கு காடுகள் மற்றும் அரிமரங்களை அகற்றும் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவம் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய அவற்றை நிறைவேற்றுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.
- எமது வாடிக்கையாளர்களுடன் நேர்மையான வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்கும் அனைத்து இலங்கையர்க்கும் பெறுமதிகளை உருவாக்குதல் எமது நிலைப்பாட்டின் முதன்மைக் காரணி என நாம் எற்றுக் கொண்டுள்ளோம்.
- திறன்களின் வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி, தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றால் எமது ஊழியர்களின் விளைபயன் மட்டத்தை மேம்படுத்துவதற்கு செயற்படுகின்றோம்.
- எமது வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மற்றும் நேர்மையான சேவையை வழங்குவதற்கு எமது எல்லா காரியங்களிலும் அவர்களை முதன்மைப்படுத்தி செயற்படுகின்றோம்.
- எமது அனைத்து செயற்பாடுகளின் போதும் மற்றும் சேவைகளை வழங்கும் போதும் தனிப்பட்ட விசுவாசத்தினை உயர் மட்டத்தில் பேணுவதாக உறுதிப்படுத்துகின்றோம்.
- எமது எதிர்கால சந்ததியினரின் பெறுமதிமிக்க தேசிய மரபுரிமைகளான சூழல் மற்றும் வன வளங்களைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளையும் சமூக விழுமியங்களையும் பின்பற்றுகின்றோம்.



# பணிப்பாளர் சபை - 2014



**திரு எஸ். அமரசிங்க- தலைவர்**
- அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

**திரு கோசல ஹெட்டிஆரச்சி - செயற்படு**
பணிப்பாளர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

**திரு ஏ.கே.ஏ.வை. தரங்க**
- பணிப்பாளர் (திறைசேரி பிரதிநிதி)

**திரு எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க**
- பணிப்பாளர் (வனப் பாதுகாப்பு ஜெனரல்)

**திரு டப்ளியு'.எம். விஜேரத்ன**
- பணிப்பாளர்

**பேராசிரியர் ஹிரான் எஸ் அமரசேக்கர**
- பணிப்பாளர்

**திருமதி. மேரி டிக்மன**
- பணிப்பாளர்

**முதலாவது வரிசை**

திரு எஸ். அமரசிங்க
- தலைவர்

**இரண்டாவது வரிசை (இடமிருந்து வலம்)**

எம்ரீ.கருணாரத்ன
பீ. பொது முகாமையாளர் (இயக்குதல்)

கே. சிறினிவங்ஷ
பீ. பொது முகாமையாளர் (மனித வள, நிர்வாக)

டீ.யு'. தயாரத்ன
பீ. பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்ப)

**மூன்றாவது வரிசை (இடமிருந்து வலம்)**

ஜீ. சேனானயக்க
பீ. பொது முகாமையாளர் (விற்பனை)

டபளியு'.டப்.ளியு'எம்.ஜே. குரே
பி. பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு)

**நான்காவது வரிசை (இடமிருந்து வலம்)**

எம்.எம்.ஜீ.பீ. ஹேரத்
பி. பொது முகாமையாளர் (உற்பத்தி, தொழில்நுட்பம்)

கலாநிதி என். ருவன்பத்திரண
பி. பொது முகாமையாளர் (ஆய்வு, பயிற்சி, அபிவிருத்தி)

ஜீ.டீ.எஸ். குமாரசிங்க
பி. பொது முகாமையாளர் (நிதி)




# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு - 2014




# 2014ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபை மீளாய்வு

இவ்வாண்டில் கூட்டுத்தாபனத்தால் 3,474 மி. ரூபா மொத்த விற்பனையொன்றினைப் பெற்றுள்ளதுடன், (கடந்த வருடத்தில் மொத்த விற்பனை 2,894 மி.ரூ.) அதனைக் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 20% அதிகரிப்பாகும். கடந்த வருடத்தின் மொத்த இலாபம் 1.198 மி.ருபா என்பதுடன், இவ்வருடத்தின் மொத்த இலாபம் 1,453 மி.ரூபாவாகும். அதனைக் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 21% அதிகரிப்பாகும். எவ்வாறெனினும், மொத்த விற்பனையில் அதிகரிப்பு ஏற்படினும், குறிப்பிட்ட சில அரச கொள்கைகள், பொருளாதார நிலைமைகள், அரசியல் காரணிகள் என்பன செலவினங்கள் அதிகரிப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையிலும் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

| செயலாற்றுகை | 2014 | 2013 |
|---|---|---|
| | மி. ரூ. | மி. ரூ. |
| மொத்த விற்பனை | 3,474 | 2,894 |
| மொத்த இலாபம் | 1,453 | 1,198 |
| ஏனைய செயற்படு வருமானங்கள் | 60 | 61 |
| செயற்படு இலாபம் | 204 | 124 |
| செயற்பாடற்ற இலாபம் | 223 | 258 |
| திறைசேரிக்கு செலுத்திய விசேட வரி | 25 | 50 |
| வரிகளுக்கு முன்னரான தேறிய இலாபம் | 427 | 382 |




மொத்த விற்பனை (மி. ரூபா)




மொத்த இலாபம் (மி. ரூபா)

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் விற்பனை மற்றும் விநியோகம் ஆகயிவற்றின் செலவினங்கள் 14% இனால் அதிகரித்தது. நிறுவன மற்றும் நிர்வாகச் செலவினங்கள் கடந்த வருடத்தில் 652 மி.ரூபாவாக இருந்ததுடன், இவ்வருடத்தில் அது 757 மி.ரூபாவாகும். அவ்வதிகரிப்பு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 16% ஆகும்.





செயற்படு இலாபம் (மி.ரூ.)




செயற்பாடற்ற ஏனைய வருமானங்கள் (மி.ரூ.)

2014ஆம் ஆண்டில் நிறுவன, நிர்வாக, விற்பனை, விநியோகம் ஆகியவற்றின் செலவினங்களைக் கழித்ததன் பின்னர் விசேட திறைசேரி வரி மற்றும் வருமான வரிகளுக்கு பின்னரான தேறிய இலாபம் 206 மி.ரூபாவாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அது 24 மி.ரூபா அதிகரிப்பாகும்.


சொத்துக்கள் மீதான நன்மைகள் வீதம் மற்றும் உரிமைப்பங்கு மீதான நன்மைகள் வீதம் 2014ஆம் ஆண்டின் போது முறையே 8மூ மற்றும் 12% ஆகும்.

| ஆண்டு | சொத்துக்கள் மீதான நன்மைகள் வீதம் | உரிமைப்பங்கு மீதான நன்மைகள் வீதம் |
|---|---|---|
| | | |
| 2014 | 8% | 12% |
| 2013 | 8% | 11% |

2014ஆம் ஆண்டில் அரச வருமானத்திற்கு கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு 1,396 மி.ரூபாவாகும். கடந்த ஆண்டில் அது 1,276 மி.ரூபாவாகும்.



ஏனைய செயற்படு வருமானம் (மி.ரூ.)



திறைசேரி மற்றும் வருமான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் (மி.ரூ.)

## உற்பத்தி

### அரச காடுகளிலிருந்து அரிமரங்களை வெட்டுதல்

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் வன முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்ப வெட்டுவதற்காக தேக்கு, பைனஸ், யு'கலிப்டஸ் போன்ற காட்டு மரங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் வெட்டுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ள ஹெக்டேயர் அளவு மேலே குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

| மர வகை | முற்றாக வெட்டுதல ( ஹெக்டேயர்) | | மெல்லியதாக்குதல் (ஹெக்டேயர்) | |
|---|---|---|---|---|
| | 2014 | 2013 | 2014 | 2013 |
| தேக்கு | 538.0 | 600.0 | 382.3 | - |
| யு'கலிப்டஸ் | 20.0 | 26.0 | 98.0 | 352.2 |
| பைனஸ் | 136.3 | 124.6 | - | - |
| காயா | - | - | - | - |
| எக்கேஷியா | 9.0 | 27.0 | 6.5 | - |

### வெட்டிய மரங்களை மரத்துண்டங்களாக்குதல்

2013ஆம் வருடத்தில் மரத்துண்டங்கள் உற்பத்தி 4,117 கன மீற்றருக்கு ஒப்பாக 2014ஆம் வருடத்தில் 4,239 கன மீற்றர் மரத்துண்டங்கள் அரியும் ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், நாடு முழுதும் உள்ள அரிமர விற்பனைக் களஞ்சியசாலைகளிலிருந்து 2,567 கன மீற்றர் மரத்துண்டங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### மின்கம்பங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளைப் பரிகரித்தல்

2014ஆம் வருடத்தில் 39,389 சிலிப்பர் கட்டைகள், 41,332 மின்கம்பங்கள், 38,630 யானை வேலிக் கம்பங்கள் என்பன அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கல்தமுல்லை, கெப்பெட்டிபொலை, பு'சா ஆகிய பரிகரிப்பு நிலையங்களில் பரிகரிப்பு செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2014ஆம் ஆண்டில் சிலிப்பர் கட்டைகள் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவு பின்னடைவு காணப்பட்டது.

### தளபாட உற்பத்தி

அரசாங்க மரக கூட்டுத்தாபனத்தின் அம்பாறை, கல்தமுல்லை, பு'சா ஆகிய தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து 260.4 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 238.3 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க தளபாடங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் இரத்மலானை, கண்டி, இரத்தினபுரி, தலல்ல, பு'சா, அம்பாறை தளபாட காட்சியறைகளிலிருந்து விற்பனை செய்யப்பட்டுள்ளன.




### 2013 - 2014ஆம் வருடங்களில் உற்பத்தி, விற்பனை, வருமானம்

| | | உற்பத்தி அளவு | | விற்பனை அளவு | | மொத்த விற்பனை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2014 | 2013 | 2014 | 2013 | 2014 | 2013 |
| குற்றிகள் | க.மீ. | 131,162 | 106,122 | 118,231 | 96,560 | 2,336.8 | 1,958.0 |
| மரத்துண்டங்கள் | க.மீ. | 4,239 | 4,117 | 2,567 | 2,487 | 185.4 | 182.2 |
| சிலிப்பர் கட்டைகள் | அலகு | 39,389 | 73,526 | 64,761 | 64,938 | 568.7 | 527.3 |
| மின்கம்பங்கள் | அலகு | 41,332 | 31,887 | 32,567 | 29,413 | 314.0 | 222.2 |
| யானை வேலிக் | அலகு | 38,630 | 26,475 | 36,088 | 37,827 | 104.5 | 100.2 |
| கம்பங்கள் | க.மீ. | 126,333 | 105,299 | 126,130 | 107,224 | 12.8 | 10.7 |
| விறகு | அலகு | 105,537 | 85,156 | 102,301 | 86,922 | 47.0 | 39.3 |
| வேலிக் கம்பங்கள் | | 110,254 | 88,685 | 116,635 | 83,927 | 9.8 | 7.6 |






*அரசாங்க மரக கூட்டுத்தாபனத்தின் அம்பாறை, கல்தமுல்லை, பு'சா ஆகிய தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து 260.4 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 238.3 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க தளபாடங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் இரத்மலானை, கண்டி, இரத்தினபுரி, தலல்ல, பு'சா, அம்பாறை தளபாட காட்சியறைகளிலிருந்து விற்பனை செய்யப்பட்டுள்ளன.*




## எமது சேவைகள் கிடைக்கும் இடங்கள்


12 பிராந்திய அலுவலகங்கள், நாடு முழுதும் செயற்படும் 54 அரிமர விற்பனைக் களஞ்சியசாலைகள், கல்தமுல்லை, அம்பாறை, பு'சா ஆகிய இடங்களில் 03 தளபாட உற்பத்தி நிலையங்கள், கண்டி, இரத்தினபுரி, தலல்ல, அம்பாறை, கல்தமுல்லை, பு'சா ஆகிய இடங்களில் 06 தளபாட காட்சியறைகள், கெப்பெட்டிபொல, கல்தமுல்லை, பு'சா ஆகிய இடங்களில் 03 அரிமரப் பதனிடல் பொறித்தொகுதிகள், அம்பாறை, கண்டி, பு'சா, கல்தமுல்லை, இரத்மலானை, தலல்ல ஆகிய இடங்களில் 06 மர ஆலைகள், பண்டாரவளையில் 04 மர ஆலைகள், இரத்தினபுரியில் 02 மர ஆலைகள், கெப்பெட்டிபொலவில் 04 மர ஆலைகள், குருணாகலையில் 02 மர ஆலைகள் எனச் செயற்படும் வீதததில், நாட்டின் அனைத்து பாகங்களும் உட்படுமாறு நாட்டின் சகலருக்கும் எமது சேவைகள் கிடைக்கும் விதத்தில் எமது நிர்வாகக் கட்டமைப்பு மிகவும் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுள்ளது.





### அம்பாறைப் பிராந்தியம்





### அனுரதாபுரப் பிராந்தியம்





### பண்டாரவளைப் பிராந்தியம்




## கொழும்புப் பிராந்தியம்




## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்





## கண்டிப் பிராந்திய அலுவலகம்








## குருணாகலைப் பிராந்திய நிலையம்





## மொணறாகலைப் பிராந்தியம்





## மாத்தறைப் பிராந்தியம்




## நுவரெலியா பிராந்தியம்




## பொலன்னறுவைப் பிராந்தியம்




## இரத்தினப்புரிப் பிராந்தியம்






## இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைதல் தொடர்பான மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் மற்றும் அனைத்து பிராந்திய முகாமையாளர்கள், கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்களின் ஒத்துழைப்புடன் மாதாந்தம் முகாமைத்துவக் கூட்டங்கள் நடத்தப்படுவதுடன், அதில் உண்மையான செயற்படுதிறன், உற்பத்தி மற்றும் விற்பனை இலக்கு ஆகியவற்றுடன் ஒப்பிடப்பட்டு நோக்கப்படும். இக்கூட்டங்களில் அனைத்து தடைகளும் பிரச்சினைகளும் உரிய பிராந்திய முகாமையாளர்களுடன் கலந்துரையாடப்பட்டு இனங்காணப்படுவதுடன், அவை சம்பந்தமாக பல்வேறு தீர்மானங்கள் மற்றும் மாற்றீட்டு செயன்முறைகள் முன்மொழியப்பட்டு, பின்னர் அக்கருத்துக்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படும். மேலும், கூட்டுத்தாபனத்தின் இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான நெறிமுறைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பணப்பாய்ச்சல் ஆகியவற்றை அடைந்து நிதி சார் ஆற்றலமிகு நிறுவனமாக உறுதிப்படுத்தும் இலக்காக புது சந்தர்ப்பங்கள், புது கருத்துக்கள், மேற்கொள்ளவேண்டிய மாற்றங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படும்.

பணிப்பாளர் சபை சார்பாக ஒப்பமிடப்பட்டது.

எஸ் அமரசிங்க
தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

*நாட்டின் அனைத்து பாகங்களும் உட்படுமாறு நாட்டின் சகலருக்கும் எமது சேவைகள் கிடைக்கும் விதத்தில் எமது நிர்வாகக் கட்டமைப்பு மிகவும் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுள்ளது.*



# அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டியின் அறிக்கை 2014

## அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டியின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. ஏ.கே.ஏ.வை. தரங்க | - கமிட்டித் தலைவர் |
| திரு. ஏ. சத்துருசிங்க | - கமிட்டி உறுப்பினர் |
| கலாநிதி ஹிரான் அமரசேக்கர | - கமிட்டி உறுப்பினர் |

2014ஆம் ஆண்டிற்குரிய கீழ்வரும் விடயங்கள் உரிய கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டிருப்பதுடன், அவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக பரிந்துரைகளுடன் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. மாதாந்த நிதி மற்றும் பௌதிக செயலாற்றுகை
2. வருடாந்த கணக்குகள்
3. வருடாந்த பாதீடு மற்றும் திருத்தப்பட்ட பாதீடு
4. உள்ளகக் கணக்காய்வு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு விசாரணைகளும் பதில்களும்
5. பணிக்குழாம் மற்றும் நிர்வாக விடயங்கள்
6. சட்ட நடவடிக்கைகள்
7. ஊழியர் கடன்கள், முற்பணம் மற்றும் விலைமனு கோரல்கள்

திரு. ஏ.கே.ஏ.வை. தரங்க

தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி




# நிதி மற்றும் உற்பத்திச் செயலாற்றுகை

கடந்த அறிக்கையின் படி ஏழு வருட கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைப்பாட்டை பேணுவதற்கான நிதி நிலைமையை மேம்படுத்தல் தொடர்பான சுருக்கம்


எட்டு வருடங்களுள் நிதிச் செயலாற்றுகையின் சுருக்கத்தில் பணப்பாய்ச்சல், நிதி சார் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மூலதனச் செலவினங்கள், இலாபங்கள் என்பன அடங்கும். கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கும் இலாபங்கள் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றைக் காட்டும் சுட்டிகள், முதலீட்டுத் திட்டங்கள், செயல் திட்டங்கள் என்பன பொருத்தமான நிதி கட்டுப்பாட்டுக்குள் அமைந்தன என்பதற்கு சான்று பகர்கின்றன. கடந்த வருடத்திற்குள் நிதிதொடர்பாக கிடைத்துள்ள முன்னேற்றம் மூலம் கூட்டுத்தாபனத்தின் நிலைப்பாடு மற்றும் உறுதிநிலை தொடர்பாக எதிர்காலத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை உறுதிபடுத்தப்படுகின்றது. மேலும், நிதிப் பிரிவில் மற்றும் செயற்பாட்டுப் பிரிவில் அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்றிக்கொள்வதன் மூலம் நிறுவன ரீதியான திட்டத்தின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வருமான வளரச்சிப் போக்குப்

வரியுடன் (ரூ - 000)





வரியின்றி (ரூ - 000)





## இலாப வளர்ச்சிப் போக்குப்


மொத்த இலாபம் (ரூ - 000)




வருமானம் மற்றும் திறைசேரி வரி செலுத்துவதற்கு முன்னரான தேறிய இலாபம் (ரூ - 000)




செயற்பாட்டு இலாபம் (ரூ.)





## உற்பத்தி வளர்ச்சியடையும் போக்குப் பகுப்பாய்வு


குற்றிகள் உற்பத்தி (க.மீ.)





மரத்துண்டங்கள் உற்பத்தி (க.மீ.)




சிலிப்பர் கட்டைகள் உற்பத்தி





மின்மாற்றிக் கம்பங்கள் உற்பத்தி (அலகு)








தளபாட உற்பத்தி (மில்லியன் ரூ.)




யானைவேலிக் கம்பங்கள் உற்பத்தி




## பெறுமதி கூட்டல்



## மூலதன முதலீடுகள் - 2014

| விபரம் | ரூபா |
|---|---|
| பொரலந்த ஊழியர் உத்தியோகபு'ர்வ மனைகள் - தெவ நிவஹனபூ | 10,156,750 |
| கொதிகலன்கள் - வீ.பீ.சீ. 02 தொன் | 9,347,233 |
| ஹைனோ கிரேன் லொறி - 05 | 40,565,964 |
| தலாவ புதிய கட்டடம் | 5,200,620 |
| கொதிகலனுடனான கட்டடம் | 3,071,820 |
| பரிகரிப்புத் தொகுதியை அபிவிருத்தி செய்தல் | 2,776,696 |
| ஒட்டுச்சுட்டான் அரிமரக் களஞ்சியசாலை | 2,498,823 |
| Holytek (taiwan) yrt-115 "rectangular tenoner" | 2,410,268 |
| கணினிகள் - லெனொவோ 25 | 2,300,000 |
| மர அரிவாலைக் கட்டடம் | 2,212,649 |

## முதலீடுகள்

| முதலீடுகள் | 31-12-2013<br>ரூபா | 31-12-2014<br>ரூபா |
|---|---|---|
| அரச நிறுவனங்களில் தற்காலிக மேலதிக | | |
| நிதியக் கணக்கு | 338,010,495 | 360,226,630 |
| மக்கள் வங்கி | 811,508,552 | 696,410,412 |
| காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் சபை | 500,000 | 500,000 |
| இலங்கை வங்கி | 509,082,847 | 877,910,713 |
| அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 81,474,846 | 130,485,324 |
| வரையறுக்கப்பட்ட லங்கா டிம்பர் பிலான்டேஷன் | 30,000,000 | - |
| மொத்தம் | **1,770,576,739** | **2,065,533,079** |



## பத்தாண்டு கால தகவல்கள்

| (முழுமையான பெறுமானங்கள்) | | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முழு வருடாந்த வருமானம் | ரூபா'000 | 1,529,079 | 2,106,155 | 2,531,611 | 2,986,925 | 3,445,141 | 3,616,164 | 3,103,744 | 3,563,390 | 3,213,547 | 3,756,482 |
| வருடாந்த மொத்த இலாபம் | ரூபா'000 | 899,729 | 966,095 | 1,050,896 | 1,210,845 | 1,351,695 | 1,365,285 | 1,237,640 | 1,546,107 | 1,197,518 | 1,453,451 |
| வட்டி, வருமான வரிகளுக்கு முன்னர் தேறிய இலாபம் | ரூபா'000 | 457,750 | 480,641 | 488,535 | 647,039 | 810,612 | 877,623 | 603,499 | 801,681 | 382,337 | 427,222 |
| மொத்த ஊழியர் ஆகுசெலவு | ரூபா'000 | 596,684 | 774,751 | 841,831 | 852,879 | 898,652 | 901,910 | 953,498 | 1,065,052 | 1,117,036 | 1,254,516 |
| வருடாந்த மூலதனச் செலவினங்கள் | ரூபா'000 | 2,051 | 13,523 | 95,745 | 141,327 | 112,909 | 237,332 | 180,546 | 162,509 | 332,870 | 115,132 |
| வருட இறுதியில் நடைமுறையற்ற சொத்துக்கள் | ரூபா'000 | 1,372,833 | 1,579,613 | 1,338,570 | 1,523,553 | 1,793,467 | 1,801,988 | 1,739,893 | 1,479,880 | 1,658,535 | 1,654,908 |
| வருட இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள் | ரூபா'000 | 852,622 | 962,569 | 1,545,428 | 1,407,022 | 2,079,543 | 2,341,020 | 2,177,892 | 2,929,185 | 3,153,777 | 4,004,860 |
| வருட இறுதியில் நடைமுறைப் பொறுப்புக்கள் | ரூபா'000 | 285,475 | 528,005 | 690,558 | 455,460 | 1,028,979 | 1,034,258 | 497,229 | 804,102 | 1,050,258 | 1,591,991 |
| வருட இறுதியில் நடைமுறையற்ற பொறுப்புக்கள் | ரூபா'000 | 285,339 | 341,581 | 370,816 | 362,399 | 364,553 | 399,057 | 399,953 | 409,030 | 384,831 | 484,649 |
| வருட இறுதியில் உரிமைப் பங்கு | ரூபா'000 | 1,654,641 | 1,672,595 | 1,822,624 | 2,112,716 | 2,479,478 | 2,709,694 | 3,020,602 | 3,195,933 | 3,377,223 | 3,583,129 |
| ஒன்றிணைந்த நிதியத்திற்கான பங்களிப்பு | ரூபா'000 | 50,000 | 75,000 | 150,000 | 75,000 | 50,000 | 413,490 | 75,000 | 600,000 | 50,000 | 25,000 |
| வருட இறுதியில் ஊழியர் எண்ணிக்கை | எண்ணிக்கை | 2,846 | 2,751 | 2,634 | 2,499 | 2,457 | 2,346 | 2,267 | 2,187 | 2,139 | 2,186 |
| வருட இறுதியில் மேலதிக நிதிய முதலீட்டு மீதி | ரூபா'000 | 1,047,004 | 1,267,102 | 834,037 | 777,101 | 858,717 | 605,235 | 764,328 | 298,546 | 338,010 | 360,227 |
| **பிரதான செயற்படு சுட்டிகள்** | | | | | | | | | | | |
| உரிமைப் பங்கிற்கான வருமான வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | % | 27.66 | 28.74 | 26.80 | 30.63 | 32.69 | 32.39 | 19.98 | 25.08 | 11.32 | 11.92 |
| மொ. சொத்துக்களுக்கான வட்டி, வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | % | 20.57 | 18.91 | 16.94 | 22.08 | 20.93 | 21.18 | 15.40 | 18.18 | 7.94 | 7.55 |
| நடைமுறை வீதம் | முறைகள் | 2.99 | 1.82 | 2.24 | 3.09 | 2.02 | 2.26 | 4.38 | 3.64 | 3.00 | 2.52 |
| ஊழியர் ஒருவருக்கான ஊழியச் செலவு | ரூபா'000 | 210 | 282 | 320 | 341 | 366 | 384 | 421 | 487 | 522 | 574 |
| உரிமைப்பங்கிற்கான சொத்துக்களின் வீதம் | முறைகள் | 1.34 | 1.52 | 1.58 | 1.39 | 1.56 | 1.53 | 1.30 | 1.38 | 1.42 | 1.58 |
| சொத்துக்களின் மீதான பங்கிலாப வீதம் | % | 20.57 | 18.91 | 16.94 | 22.08 | 20.93 | 21.18 | 15.40 | 18.18 | 7.94 | 7.55 |
| மொத்த விற்பனை வளர்ச்சி | % | 19.99 | 37.74 | 20.20 | 17.99 | 15.34 | 4.96 | (14.17) | 14.81 | (9.82) | 16.89 |



# தேசிய பொருளாதாரத்திற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக புதிய உற்பத்திகளை உருவாக்குவதற்கும், விளைபயன்மிக்கதாக மூலதன மற்றும் நிபுணத்தவ பாவனைக்கு உந்துதல் அளிப்பதற்கும் புதிய பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பதி உபாயங்களை அறிமுகப்படுத்தி சந்தையினை விருத்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

# தேசிய பொருளாதாரத்திற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு

அரிமரத் தொழிற்றுரையின் முதன்மையாளர் என மிளிரும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக அளப்பரிய சேவையினை நிறைவேற்றுகின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரத் தொழிற்றுறையின் முன்னேற்றத்திற்காக மட்டுமன்றி, ஏனைய துறைகளின் முன்னேற்றத்திற்காகவும் முக்கியமான பொறுப்பினை நிறைவேற்றுகின்றது. 2014ஆம் ஆண்டில் 1,392 மி.ரூபா உரிமைப்பங்கு, கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரி, நாட்டைக் கட்டியெழுப்பவதற்கான வரி, வருமான வரி மற்றும் திறைசேரிக்கு செலுத்திய வரி என அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிட்த்தக்களவு பங்களிப்பினை வழங்குகின்றது.

2010- 2014 ஆம் அண்டுகளில் உரிமைப்பங்கு, கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரி, நாட்டைக் கட்டியெழுப்பவதற்கான வரி, வருமான வரி மற்றும் திறைசேரிக்கு செலுத்திய வரி ஆகியவற்றின் சுருக்கம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| உரிமைப்பங்கு | 758,318,131 | 777,852,620 | 831,555,555 | 706,779,429 | 743,675,772 |
| கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரி, நாட்டைக் கட்டியெழுப்பவதற்கான வரி | 520,464,311 | 433,254,605 | 447,825,030 | 387,928,678 | 424,740,460 |
| வருமான வரி | 253,586,600 | 242,640,682 | 192,453,384 | 131,882,763 | 202,347,603 |
| திறைசேரிக்கு செலுத்திய வரி | 413,490,090 | 75,000,000 | 600,000,000 | 50,000,000 | 25,000,000 |
| மொத்தப் பங்களிப்பு | 1,945,859,132 | 1,528,747,907 | 2,071,833,969 | 1,276,590,870 | 1,395,763,835 |

1. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சமூகத்தில் அதிகமானோருக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதுடன், தேசிய பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் முக்கிய காரணியான வேலையில்லாப் பிரச்சினையைக் குறைப்பதற்கு பெரிதும் சேவையாற்றியுள்ளது.

2. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கடும் கஷ்டப் பிரதேசங்களில் பிராந்திய அலுவலகங்களை நிறுவி, பிராந்திய அபிவிருத்தியினை ஏற்படுத்தவதற்கும் பிராந்திய வேறுபாடுகளை இல்லாதொழிக்கவும் நடவடிக்கை எடுக்கின்றது. அவ்வாறான பிரதேசங்களில் வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்குவதன் மூலம் பொது வசதிகள் பலவற்றை விருத்தி செய்வதறகு வழி ஏற்பட்டுள்ளது.

3. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக புதிய உற்பத்திகளை உருவாக்குவதற்கும், விளைபயன்மிக்கதாக மூலதன மற்றும் நிபுணத்தவ பாவனைக்கு உந்துதல் அளிப்பதற்கும் புதிய பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பதி உபாயங்களை அறிமுகப்படுத்தி சந்தையினை விருத்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்கின்றது.


4. நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்தல் என்பது பொருளாதார அபிவிருத்தியின் முக்கியமானதொரு அங்கமாகும். நியாயமான விலையில் தரமிக்க தளபாடங்களை வழங்கி, பல்வேறு பொருட்களையும் சேவைகளையும் சந்தையில் அறிமுகப்படுத்துவதற்கும் சமூகத்திற்குப் போன்றே சூழலிற்கும் சாதகமான உற்பத்திகள் மூலம் பொருளாதாரத்திறகு உயர்ந்த பங்களிப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

5. பொருளாதாரத்தின் சாதகமான நிலைப்பாடு மற்றும் அபிவிருத்தியினை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான இறக்குமதிச் சந்தைக்கு எதிராக அந்நியச் செலாவணி வருமானத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஏற்றுமதிச் சந்தையினை நோக்கி பிரவேசிப்பதன் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.









*நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்தல் என்பது பொருளாதார அபிவிருத்தியின் முக்கியமானதொரு அங்கமாகும். நியாயமான விலையில் தரமிக்க தளபாடங்களை வழங்கி, பல்வேறு பொருட்களையும் சேவைகளையும் சந்தையில் அறிமுகப்படுத்துவதற்கும் சமூகத்திற்குப் போன்றே சூழலிற்கும் சாதகமான உற்பத்திகள் மூலம் பொருளாதாரத்திறகு உயர்ந்த பங்களிப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.*

6. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரச் சந்தையில் ஏகாதிபத்திய அதிகாரம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அரிமரத் தொழிற்றுறையின் முழுமையான செயற்பாடுளில் இணைந்து மற்றும் அதனைக் கட்டுப்படுத்தி அரசாங்க மற்றும் தேசிய மட்டத்தில்வசதிகளை வழங்குவதற்கு பங்களிக்கின்றது.

7. நாட்டில் அதிகமானோருக்கிடையிலும், பல்வேறு புவியியற் பிரதேசங்களுக்கிடையிலும் நியாயமான வருமானம் மற்றும் விரிவாக்கத்தை ஏற்படுத்த ஊக்கமளிக்கின்றது.

8. சமூகப் பொறுப்புமிக்க அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும், சுற்றாடல் நேயமிக்க பணிகளை விருத்தி செய்வதற்கும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தி வருகின்றது.



# நிறுவனஞ்சார் நிர்வாகம்

நிறுவனஞ்சார் நிர்வாகம் என்பது நிறுவனத்தின் கட்டமைப்பு மற்றும் தொடர்பாடல் குறித்து நன்கு தெளிவினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் நிறுவனத்தின் போக்கு மற்றும் செயலாற்றுகை தீர்மானிக்கப்படுவதுடன், பணிப்பாளர் சபை நிறுவனஞ்சார் நிர்வகத்திற்குப் பொறுப்புடையோர் ஆவர்.

*நிறுவனஞ்சார் நிர்வாகம் என்பது நிறுவனத்தின் கட்டமைப்பு மற்றும் தொடர்பாடல் குறித்து நன்கு தெளிவினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் நிறுவனத்தின் போக்கு மற்றும் செயலாற்றுகை தீர்மானிக்கப்படுவதுடன், பணிப்பாளர் சபை நிறுவனஞ்சார் நிர்வகத்திற்குப் பொறுப்புடையோர் ஆவர்.*

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை, சிரேஷ்ட முகாமை மற்றும் ஒட்டு மொத்த ஊழியச் சமூகம் என்பன அலுவலக நடவடிக்கைகளின் போதும் ஏனைய எல்லா தேவைப்பாடுகளின் போதும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நற்பெயர் மற்றும் பெருமை ஆகியவற்றை உயர்த்துவதற்கு நிறுவனஞ்சார் நிர்வாகத்திற்கேற்ப ஒழுகுவது அத்தியாவசியமாகும்.

## பணிப்பாளர் சபை

- கூட்டுத்தாபனத்தின் முகாமையை நிர்வகித்தலும், கண்காணித்தலும்பணிப்பாளர் சபையின் பிரதான வகிபங்காகும்.
- பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாவலர்கள் ஆவர். அதாவது, பக்கசார்பாகவும் உச்ச நம்பிக்கையுடனும் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இருப்பதுடன், அதன் நலனுக்காக மாத்திரம் கடமையாற்றுதல் வேண்டும்.
- பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அவரவர்களுக்குரிய சட்டதிட்டங்களுக்கு இணங்க தமது கடமைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

பணிப்பாளர் சபை தலைவர், செயற்படு பணிப்பாளர், வன பாதுகாப்பு ஜெனரல், திறைசேரிப் பிரதிநிதி மற்றும் சட்டத்தரணிகள் உட்பட்ட ஏழு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. நிறுவனத்திற்கு முக்கியமான அனைத்து பிரதான தீர்மானங்களையும் எடுப்பதற்காக மாதாந்தம் பணிப்பாளர் சபைக் கூட்டம் நடைபெறும். பணிப்பாளர்கள் விருப்புக்குரிய தரப்பினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை உடையவர்களாவதுடன், கூட்டுத்தாபனத்தின் ஒட்டு மொத்த முகாமைக்கு அவர்கள் பொறுப்புடையவர்களாவர்.

## சட்டபு'ர்வமான பிணைப்புக்கள்

1. பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட வருடாந்த வரவுசெலவுத் திட்டம் வருட ஆரம்பத்திற்கு முன்னர் அமைச்சிற்கு, திறைசேரிக்கு, கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
2. நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் வருடாந்த அறிக்கையின் மற்றும் கணக்குகளின் வரைவினைக் கணக்காய்வாரள் அதிபதியிடம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. நிதியாண்டு முடிவடைந்த 150 நாட்களுக்குள் மும்மொழிகளிலும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட இறுதிக்கணக்குகள் மற்றும் கணக்காய்வு அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தினை அமைச்சிற்கு, திறைசேரிக்கு, கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

## கணக்காய்வு கமிட்டி

நிதி முகாமைத்துவ ஆற்றல்கள் நிறைந்த பணிப்பாளர் சபையின் சபையின் நிறைவேற்று அதிகாரமற்ற உறுப்பினர்கள் மற்றும் திறைசேரி பிரதிநிதி ஒருவரைக் கமிட்டி கொண்டுள்ளது. வருடாந்த நிதிக் கூற்றுக்கள், கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை, வருடாந்த கணக்காய்வுத் திட்டம், உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு அறிக்கைகள் ஆகியவற்றை மீளாய்வு செய்யும் நோக்குடன், இக்கமிட்டி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒன்றுகூடும்.



## முகாமைத்தவக் கூட்டம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்கள் பங்குபற்றும் முகாமைத்தவக் கூட்டங்களில் உற்பத்தி, விற்பனை மற்றும் நிதி செயலாற்றுகை என்பன மீளாய்வு மற்றும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக, முகாதைத்துவக் கூட்டங்களில் நிறுவனத்தின் ஆரம்பப் பிரச்சினைகள் மற்றும் முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அவற்றிற்குத் தேவையான தீர்வுகள் குறித்து தீர்மானம் எடுக்கப்படும்.

## பிராந்திய செயலாற்றுகை முகாமைத்துவக் கூட்டங்கள்


இக்கூட்டம் விசேடமாக வன வேலைத்தளங்களுக்குப் பொறுப்பாகவுள்ள வேலைத்தள உத்தியோகத்தர்கள், விற்பனைகளுக்குப் பொறுப்பாகவுள்ள களஞ்சியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பிராந்திய பணிக்குழாத்தினருக்காக நடாத்தப்படும். பிராந்தியங்களின் செயலாற்றுகையைப் பாராட்டுதல் மற்றும் உற்பத்தி தொடர்பிலும் விற்பனை தொடர்பிலும் இலக்கு வைத்தல் இக்கூட்டங்களின் நோக்காகும். பல்வேறு தடங்கல்கள் மற்றும் சந்தர்ப்பங்களை இனங்காண்பதற்கும் பிரச்சினைகளுக்குரிய தீர்மானங்களை எடுப்பதற்கும் இக்கூட்டங்கள் மூலம் இயலுமாகின்றன.


## தொழில்நுட்ப மதிப்பீட்டுக் கமிட்டி

கேள்விப் பத்திரங்களை மதிப்பீடு செய்வதற்கும் சிபாரிசுகளை முன்வைப்பதற்கும் அரச கொள்வனவு சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கமிட்டி நியமிக்கப்படும்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அதன் வருடாந்த அறிக்கையை ஒவ்வொரு வருடத்திலும் உடன்பட்டுள்ள காலத்தினுள் வெளியிடும். வருடாந்த அறிக்கை விருப்புள்ள தரப்பினரின் தேவைகளுக்காக தயாரிக்கப்படுவதுடன், கூட்டுத்தாபனத்தின் நிதி முகாமைத்துவ அமைப்பினை விருத்தி செய்வதற்கு நிறுவப்பட்ட நல்லாட்சிக்கான வழிகாட்டியுடன் இணங்குதல் வேண்டும்.







ஆருசுர்ஞ்கு
கூடுடுத்துர்புனுத்தீனு்
முருக்
ஆணுடுறீக்ஜக
நோக்கு மற்றும்
பணிக் கூற்று
பணிப்பாளர்கள்
மற்றும் சிரேஷ்ட
முகாமையாளர்களின்
சுருக்கமான சுயவிபரம்
மீளாய்வாண்டின் போது
அவ்வாண்டில் முகங்
கொடுத்த சந்ர்ப்பங்கள்
மற்றும் இடையு‘றுகள் குறித்து
தலைவரின் மீளாய்வு
பணிப்பாளர்
அறிக்கை
கணக்காய்வு
கமிட்டியின்
அறிக்கை
கணக்காய்வு
செய்யப்பட்ட
நிதிசார் கூற்று
கணக்காய்வாரள்
தலைமை அதிபதியின்
அறிக்கை
இவ்வருடத்தில் செயற்படு
செயலாற்றுகையினை
பிரத்தியேகமாகக் குறிப்பிட்டு
பொது முகாமையாளரினால்
மீளாய்வு
தொடரும் வருடத்தின்
திகதிகள் உள்ளடங்கிய
நிதிசார் சுருக்கம்







### விருப்புள்ள தரப்பினருடன் காணப்படும் தொடர்பு

பிரதான விருப்புள்ள தரப்பினருடன் சாதகமான தொடர்பினைப் பேணுவதன் முக்கியத்துவத்தினை பணிப்பாளர் சபை புரிந்து கொண்டுள்ளது. உள்ளகத் தொடர்பாடல் பிரதானமாக மின்னஞ்சல், ஏற்பாட்டுப் பத்திரங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவித்தல்கள் ஆகியவற்றினூடாக நடைபெறுகின்றது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தின் கொள்கைகள் மற்றும் பாவனைகள், கூட்டுத்தாபனத்தின் பெறுமதி மற்றும் சமூகப் பொறுப்புடன் இணங்குவதாக பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது. கூட்டுத்தாபனம் அதன் உள்ளக மற்றும் வெளிவாரி சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு துணை புரிகின்றது.

### சட்டரீதியான தேவைப்பாடுகளுடன் இணங்குதல

46 வருடங்களாக நாட்டின் நம்பிக்கையை ஈட்டிய பெறுமதிமிக்க அரிமரங்கள் மற்றும் மரத் தளபாடங்களை வழங்கும் முன்னோடி நாயகனாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஒப்பற்ற இடத்தினை தனதாக்கிக் கொண்டுள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 1968 ஆம் ஆண்டில் கௌரவ காணி, நீர்ப்பாசன மற்றும் மின்வலு அமைச்சரால் 1957 இல 49ஐக் கொண்ட அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளதுடன், 1982 பெப்ரவரி 05ஆந் திகதி கொண்ட இல 178;10, 5.2ஆகிய விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2009 ஆம் ஆண்டின் ஜ’ன் 26ஆந் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானி இல: 11907இன் படி மேலும் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கியுள்ள பங்களிப்பு குறித்து திருப்திப்பட முடிகிறது. அரசு இயற்கை வளங்களை பாதுகாக்கும் மற்றும் பராமரிக்கும் நோக்குடன் குறிக்கப்பட்ட பிரதேசங்களில் அனுமதியற்ற மரம் வெட்டுதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் கூட்டுத்தாபனத்திற்குரிய மாபெரும் சவாலாகும். இது கூட்டுத்தாபனத்தின் வர்த்தக நடவடிக்கைகளில் கடும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

பொறுப்பு மிக்க நிறுவனப் பிரஜையாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பிற்பட்ட திருத்தங்களினூ டாக அரசாங்கத்தின் சட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்க அதன் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்கின்றது.

- 1966 இல 13ஐக் கொண்ட வன கட்டளைச் சட்டம்
- 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டம்
- 1954 இல 15ஐக் கொண்ட கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம்
- 1958 இல 15ஐக் கொண்ட ஊழியர் பொறுப்பு நிதியம்
- 1980 இல 46ஐக் கொண்ட ஊழியர் சேமலாப நிதியம்
- 2006 இல 10ஐக் கொண்ட வருமான வரிச் சட்டம்
- 2002 இல 14ஐக் கொண்ட கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரிச் சட்டம்
- 2009 இல 09ஐக் கொண்ட தேசிய கட்டியெழுப்பும் வரிச் சட்டம்

அரசாங்க சட்டதிட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு மேலதிகமாக இலங்கை கணக்கீட்டு நியமம் (ளுடுகுசுளு மற்றும் டுமுயுளு) இலங்கை கணக்காய்வு நியமம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு ஏற்புடைதாகும். கூட்டுத்தாபனம் இலக்குகளை அடைந்துகொண்ட அளவு மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றும் அளவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வருடாந்த கணக்குகள் மற்றும் செயலாற்றுகையை மீளாய்வு செய்யும் அதிகாரம் அரச வர்த்தகம் தொடர்பிலான பாராளுமன்ற கமிட்டிக்கே வழங்கப்பட்டுள்ளது.



எமது கூட்டுத்தாபனத்தின் பிரதான மூலப்பொருள் மிகவும் பெறுமதியான இயற்கை வளமொன்றான மரமாகும். அவ்வாறே எமது மொத்த செயற்பாட்டு நடவடிக்கை நேரடியாகவும் மறைமுகமாகவும் சுற்றாடலுடன் தொடர்புறுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களின் கீழ் சட்டரீதியான சட்டகத்தினுள் இணங்குவது அத்தியாவசியமாகும். எமது கூட்டுத்தாபனம் ஏற்கனவே மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கி ஒழுகின்றது.

நாடு முழுதும் பரந்திருக்கும் எமது செயற்பாட்டு வலையமைப்பு அரிவாலைகள், பரிகரிப்பு பொறிகள், கொதிகலன்கள், சூளைகள் மற்றும் தளபாட உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. உற்பத்தி நிலையங்களிலிருந்து அகற்றப்படும் சுற்றாடலுக்கு பாதகமான விளைவை ஏற்படுத்தும் கழிவுகளை அகற்றுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் கட்டுப்பாட்டுத் தொகுதியொன்று பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை எமது செயற்பாட்டு நடவடிக்கைகளை சுற்றாடல் நேயமிக்கதாக மேற்கொள்வதற்கு பல்வேறு பிரிவுகளின் கீழ் சட்டங்கள் மற்றும் உபாயங்களைப் பிறப்பித்துள்ளது.

அதன் படி கூட்டுத்தாபனம் ஒலி மாசடைவு, நீரி மாசடைவு, வளி மாசடைவு, குப்பை கூலங்கள் மற்றும் ஏனைய சூழல் மாசடையும் செயற்பாடுகளுக்கு சூழல் மாசடைதலைக் குறைக்கும் வழிமுறைகளைப் பின்பற்றுகின்றது.

தளபாட உற்பத்தி நிலையங்கள் மற்றும் அரிவாலைகளைக் கொண்ட அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பணிகள் பிரிவிற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வருடாந்தம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இதன் படி, கூட்டுத்தாபனத்தின் எல்லா தொழிற்சாலைகளும் இந்நிபந்தனைகளுக்கு இயன்றளவு இணங்கி ஒழுகுவதற்கு ஆர்வங் காட்டப்படுகின்றது. ஏமாற்றுதல் மற்றும் ஊழல்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்கு கூட்டுத்தாபனம் பல்வேறு தரப்பினர்களுக்கு எதிராக ஒழக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன்படி வேலையிலிருந்து இடை நிறுத்துதல், ஒரு நாளைக்கான சம்பளத்தை வெட்டுதல், வருடாந்த சம்பள உயர்வினை நிறுத்துதல், பதவி உயர்வுகளைக் குறைத்தல், சம்பளத்தினை இடைநிறுத்ததல் மற்றும் நட்டத்தினை அறவிடுதல் போன்ற தண்டனைகளுக்க ஊழியர்கள் உட்படுத்தப்படுகின்றனர். இத்தண்டனைகள் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட ஏமாற்றுதல் மற்றும் ஊழில்களின் நிலையைப் பொருத்து வேறுபடும்.

எவரேனும் ஊழியர் ஒருவர் ஏதேனும் உபத்திரவங்களிற்கு அல்லது பாரபட்சத்திற்கு உட்படுவாராயின் அவரது பிரதானிக்கு அது குறித்து அறிவிப்பதற்கு அவ்வு‘ழியருக்கு சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்கில் தேவையான வழிமுறைகளை எடுப்பதற்கு கூட்டுத்தாபனத்தின் பிரதானிகள் மற்றும் உயர் முகாமை முனைப்புடன் செயற்படுவர்.

இவ்விதத்தில் எடுக்கப்படும் எல்லா உபாயங்களாலும் கூட்டுத்தாபனத்தின் மேன்மைக்காக நன்முறையில் நிர்வாகம் மேற்கொள்ளப்படுகின்றது. அது கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு விருப்புடைய தரப்பினருக்கு போன்றே நாட்டிற்கும் நன்மையாக அமையும்.


ஈற்றில் நிறுவனஞ்சார் நிர்வாகத்தின் மூலம் மகாண சபை நிறுவனங்கள், அரச மற்றும் கூட்டு விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க செயற்பட்டு நிறுவனத்தின் நற்பெயரை விருத்தி செய்வதுடன், ஊழியர் வாடிக்கையாளர் ஆகிய தரப்பினரின் பொருத்தமற்ற நடவடிக்கை காரணமாக ஏற்படக்கூடிய சர்ச்சைக்குரிய மற்றும் ஏமாற்று நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்ளலாம்.



# நீடித்து நிலைக்கும் எதிர்காலத்திற்காக

*வியாபார நிறுவனமொன்று ஒழுக்க நெறிகளைப் பாதுகாத்துக் கொண்டு பொருளாதார வளர்ச்சியினை நோக்கி தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன், ஊழியர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் நிலையை உயர்த்தியவாறு உட்புற மற்றும் வெளிப்புற சமூககத்தின் உயர்வுக்காக பங்களிப்பதே நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியாகும்.*

# நீடித்து நிலைக்கும் எதிர்காலத்திற்காக




நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி என்ற கருப்பொருளை பல்வேறு விதத்தில் விபரிக்கலாம். நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி என்பது எதிர்கால சந்ததிகளின் தேவைகளைப் பாதிக்காதவாறு தறகால தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதாகும். நீடித்த வர்த்தக அமைப்புக்கள் இலாபத்தை ஈட்டிக்கொண்டு சூழல் நேயம் மிக்கதாக தனது உற்பத்திகள் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் ஆகியவற்றை தற்கால சூழல் தேவைகளுக்கு ஏற்றவாறு மேற்கொள்வதாகும். மேலும், இது சூழலில் காணப்படும் வளங்களின் மூலம் உச்ச பயனைப் பெற்றுக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்யும். இதனை மேலும் விபரிக்கையில், வியாபார நிறுவனமொன்று ஒழுக்க நெறிகளைப் பாதுகாத்துக் கொண்டு பொருளாதார வளர்ச்சியினை நோக்கி தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன், ஊழியர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் நிலையை உயர்த்தியவாறு உட்புற மற்றும் வெளிப்புற சமூககத்தின் உயர்வுக்காக பங்களிப்பதே நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியாகும்.




## வாடிக்கையாளர்கள்

வாடிக்கையாளர்களைத் திருப்திபடுத்தும் நோக்கில், □முதலில் வாடிக்கையாளர்ù என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு எமது கூட்டுத்தாபனம் நாட்டு மக்களின் வாழ்க்கையினைச் செழிக்க வைப்பதற்கு வாடிக்கையாளரின் பல்வே6று தேவைகளுக்குப் பொருத்தமாக நவீன, பாதுகாப்பு, உயர் தரம் ஆகியவற்றைக் கொண்ட பொருட்களையும் சேவைகளையும் வழங்குகின்றது.

வாடிக்கையாளர் திருப்தி என்பது நிறுவனமொன்று வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளால் வாடிக்கையாளர் திருப்தியடையும் அளவாகும். அது மீண்டும் மீண்டும் வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையினைக் கவனத்திற் கொண்டு கணக்கிடலாம். எமது வாடிக்கையாளருள் பெரும்பாலான எண்ணிக்கையினர் அரச நிறுவனங்களாவதுடன், உதாரணமாக இலங்கை இராணுவப் படை, இலங்கை புகையிரதப் பாதைகள் திணைக்களம், இலங்கை மின்சார சபை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கீழ்வரும் விடயங்கள், வாடிக்கையளரின் திருப்திக்கு ஏதுவாகின்றன என இனங் காணப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் இலக்கினை அடைந்து கொள்வதற்கு துணைபுரிகின்றது.

1. வாடிக்கையாளரை மையப்படுத்துதல்
2. நவீனமயமாக்கம்
3. நேர்மை
4. மதித்து நடத்தல்
5. தொடர்ச்சியான முன்னேற்றம்
6. தரம்

*அரசாங்க நிறுவனமொன்றாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வாடிக்கையாளருக்கு பெறுமதிமிக்க சேவையொன்றினைப் பெற்றுக்கொடுத்து, வாடிக்கையளரை முதன்மைப்படுத்திய சலாசாரைத்தினை உருவாக்குவதற்கு தேவையான சூழலைக் கட்யெழுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*





# ஊழியர்கள்

ஊழியர்களை திருப்திபடுத்தும் நோக்கில் □மகிழ்ச்சிமிக்க ஊழியர்கள்பூ என்ற கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு நாம் எமது ஊழியர்களை மதிப்பதுடன், ஊழியர்களின் செயலாற்றுகை மீது கூட்டுத்தாபனம் தங்கியிருப்பதாக நாம் நம்புகின்றோம். நீவனஞ்சார் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கு கூட்டுத்தாபனம் மற்றும் ஊழியர்களுக்கிடையில் காணப்படும் நம்பிக்கைமிகு பிணைப்பு நல்லதோர் உந்துசக்தியாகும். ஊக்கமளிக்கப்பட்ட ஊழியர்கள் வாடிக்கையாளர்களை திருப்திமிக்கவர்களாக வைத்துக்கொள்வதற்கு விருப்பு கொள்வர். நிறுவனத்திற்க் அர்ப்பணிப்புமிக்க பக்கசார்பான ஊழியர்கள் சுயவிருப்பத்துடனேயே பக்கசார்பான வாடிக்கையாளர்களைப் காப்பதற்கும் உயர்த்துவதற்கும் தேவையான வழிமுறைகளை கடைபிடிப்பர்.

தொழில்நுட்ப ஆற்றல்களை விட மனப்பாங்கினை விருத்திசெய்தல், ஒன்றிணைந்து செயற்படும் ஆற்றல், நேயங்கொள்வதில் விருப்பு, மற்றையோருக்கு சேவை செய்தல் மிகவும் முக்கயமானவை என அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இனங்கண்டுள்ளது. ஏனெனின், ஊழியர்களிடத்தில் சரியான மனப்பாங்கு காணப்படின் விரைவில் திறமைகளை இனங்கண்டு அதன் படி ஒழுகி நடப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது உறுதியாயுள்ளது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அதன் கலாசாரத்தை அவர்களால் பாதுகாக்கும் விதத்தில் ஏற்படுத்தியுள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பாடுபட்டு வேலை செய்ய வேண்டும் என்பது அவசியம் எனக் கருதினாலும், அதற்கு நிகராக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் எனவும் நம்புகின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தமது ஊழியர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக பல்வேறு வசதிகளை வழங்குகின்றது. உதாரணமாக, சுகாதார காப்புறுதி, தேநீர் மற்றும் பகல்போசனக் கொடுப்பனவு, காலணி கொடுப்பனவு, பேருந்துக் கட்டணக் கொடுப்பனவு, ஊழியர் கடன் வசதிகள், ஊழியர் நலன்புரி வசதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மனப்பாங்கிளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான ஊழியர்களை இணைத்துக் கொள்ளுதல், தொழிலிற்கு தேவையான திறன்களை கற்பித்தல், அவர்கள் விட்டுச் செல்லாத சூழலை உருவாக்குதல் என்பன வர்த்தக வெள்ளியினை அடைந்து கொள்வதற்கு கட்டாயம் அவசியமானது என அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நம்புகின்றது.





*தொழில்நுட்ப ஆற்றல்களை விட மனப்பாங்கினை விருத்திசெய்தல், ஒன்றிணைந்து செயற்படும் ஆற்றல், நேயங்கொள்வதில் விருப்பு, மற்றையோருக்கு சேவை செய்தல் மிகவும் முக்கயமானவை என அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இனங்கண்டுள்ளது. ஏனெனின், ஊழியர்களிடத்தில் சரியான மனப்பாங்கு காணப்படின் விரைவில் திறமைகளை இனங்கண்டு அதன் படி ஒழுகி நடப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது உறுதியாயுள்ளது.*



# சுற்றாடல் மற்றும் சமூகம

காலநிலை மாற்றங்கள் மற்றும் உயிரினப் பல்வகைத்தன்மை ஆகியவற்றில் செயற்பாடுகளினாலும் போக்குவரத்துகளினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்து செயற்படுதல் போன்ற எமது செயற்பாடுகளினால் சுற்றாடலில் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதன் மூலம் சுற்றாடலுடன் இணைந்து வளர்ச்சியடைவதை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இலக்காகக் கொண்டுள்ளது.

நாட்டின் கலாசாரம், பழக்கவழக்கங்கள், வரலாறு, சட்டங்கள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு நாம் எமது பெறுமானங்களை செயற்படுத்துகின்றோம். நீடித்து நிலைக்கும் அபிவிருத்தக்காக சமூகத்தில் எழும் தேவைகளை திருப்திப்படுத்தக் கூடிய பாதுகாப்பான, சுத்தமான, உயர் தொழில்நுட்பத்தினை ஏற்படுத்துவதற்கு நாம் எப்போதும் நடவடிக்கை எடுக்கின்றோம். நாம் எவ்விடத்தில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், சமூகத்தினை வலுவு'ட்டுவதற்கும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதற்கும் வழிகொலும் சமூக செயற்பாடுகிளல் முனைப்புடன் ஈடுபடுகின்றோம்.

*பேண்தகு அரிமர விளைச்சலை அறுவடைசெய்தல் காடழிப்பிற்கு ஏதுவாக மாட்டாது. அதாவது, அரிமர விளைச்சலை அறுவடை செய்யும் பொது வன பயிர்ச்செய்கை நிலத்தில் உற்பத்தி ஆற்றலைப் பாதுகாக்கும் விதத்தில் மிகவும் முறையான மற்றும் விஞ்ஞான ரீதியில் செயற்படுவதனாலும் முதிர்ந்த மரங்களுக்குப் பதிலாக முதிய மரங்களை நட்டி, புதிய வன பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சமூகத்திற்கு நீண்ட கால நலன்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முடிகிறது.*















# நிறுவனமொன்றின் சமூகப் பொறுப்பு

## நிறுவனமொன்றின் சமூகப் பொறுப்பு

பொறுப்புடன் செயற்படுதல் ஒரு நிறுவனத்தின் சமூகப் பொறுப்பாகும் என்ற கருத்தில் குறிப்பிடலாம். எமது கூட்டுத்தாபனம் சமூகத்திற்கு பொறுப்புமிக்க ஒருவராகச் செயற்படுவதற்கு எப்போதும் முயற்சிக்கின்றோம். ஒழுக்கவிதிகள் நிறைந்த வர்த்தகம் அதன் ஊழியர்களின், வாடிக்கையாளரின், சமூகத்தின் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களின் ஆர்வத்தை அதிகரிப்பதற்கு முனைப்புடன் பங்களிப்பினைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

## மிக நல்ல சமூகத்தினை உருவாக்குவதற்கு 2014ஆம் ஆண்டினுள் கூட்டுத்தாபனதினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

1. உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு நிகழ்ச்சிகள் பல நடாத்தப்பட்டன.

- துரு ஜன் மாணவர் வங்கி, மரநடுகை நிகழ்ச்சி என்பன பயன்மிக்கதாக தொடர்ந்தும் செயற்படுத்தப்படுகின்றன. இனங்காணப்பட்ட பாடசாலைகளுக்கு பொருள் ரீதியான மற்றும் நிதி நன்கொடைகளவழங்கப்பட்டன. மேற்படி நிகழ்ச்சிகள் மூலம் வன நடுகைக் குறித்து இளம் சந்ததியினரின் ஆர்வம் மேம்படுத்தப்பட்டது. இதன்மூலம் மர இனங்கள் குறித்து தெளிவான கருத்தினை வழங்குவதற்கும், அரிமரங்கள் முதிர்ச்சிப் பருவத்தை அடைநததும் சரியான முறையில் பயன்பாட்டினைப் பெற்றுக கொள்வதற்கும் வழியேற்படும்.
- சுற்றாடல், வன பாதுகாப்பு மற்றும் உயிரினப் பல்வகைமை ஆகிய தலைப்புக்களில்பாடசாலைச் சிறார்களுக்கும் பெற்றோர்களுக்கும் விரிவுரைகள் மேற்கொள்ளப்பட்டன.
- விபரங்களைக் கொண்ட புத்தகங்கள், அறிவித்தல்கள், பிரசுரங்கள் என்பன பகிரப்பட்டன.
- பாடசாலை மற்றும் வீட்டுத் தோட்டத்திற்கு கருங்காலி கன்றுகள் போன்ற மிகப் பெறுமதிமிக்க கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- மின்னேரியா உயீரியல் பல்வகைமை பு'ங்காவினால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்து கலாசார மத்தியநிலையத்தின் காட்சிக்கூடம் ஒன்று நடாத்தப்பட்டது.

**2.** நாட்டுக்கு நிழல்பூ நிகழ்ச்சிக்கு செயற்படு பஙகளிப்பு

- நாட்டுக்கு நிழல்பூ நிகழ்ச்சிக்காக மெதவாச்சி அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 25 ஏக்கர் காணியில் 5,000 தேக்குக் கன்றுகள் நடப்பட்டன.
- பண்டாரவளை மாவட்டத்தில் 3,000 கன்றுகள் நடப்பட்டன.
- 88,000 நாற்றுக்கள் பகிர்விற்கு வழங்கப்பட்டன.

3. குப்பைக் கூளங்களை அகற்றும் முகாமைத்துவம்வ

எமது கூட்டுத்தாபனம் கடுதாசி,பொலித்தீன், சேதனக் கழிவுகள் என வகைப்படுத்துவதால் வெவ்வேறாகச் சேகரித்து முறையாக அகற்றுகின்றது.

4. முகாமைத்துவ தினக்குறிப்பேடு - 2014

பொறுப்புமிக்க நிறுவனப் பிரஜை என்ற வகையில், எம்மால் 2014ஆம் ஆண்டில் முகாமைத்துவ தினக்குறிப்பேட்டினை, இலங்கையின் பாரம்பரிய முகமூடிக் கலைபூ என்ற தொனிப்பொருளின் கீழ் தளபாடங்களில் உள்ள அழகியற் கலை, புதுமைகள் மற்றும் பழைமை வாய்ந்த தயபாடங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்தவம் குறித்து மக்களை அறிவுறுத்தும் நோக்கில் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5. தேசத்தின் மகுடம் - குளியாபிட்டி கல்வி மற்றும் வியாபாரக் கண்காட்சியில் காட்சிக் கூடமொன்றினை நிறுவுதல்

கூட்டுத்தாபனத்தின் கண்காட்சிக்கூடம் மனதைக் கொள்ளைக் கொள்ளும் பல்வகைப்பட்ட ஆக்கங்களைக் கொண்டிருந்ததுடன், பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சியை மாத்திரமன்றி கல்விசார் பெறுமானத்தையும் பெற்றுக் கொடுத்தது. மரக் கூட்டுத்தாபனத்தினால் மர அறுவடை முதல் முடிவுப் பொருள் உற்பத்தி வரையிலான படிகள் குறித்து ஒடடுமொத்த விளக்கத்தினை பார்வையாளருக்கு பெற்றுக் கொடுத்தது. மேற்படி அனைத்து நிகழ்ச்சிகளின் மூலமும் மரக் கைத்தொழில் குறித்து மக்கள் மனதில் உள்ள பாதகமான சமூக மனப்பாங்குகளை மாற்றுவதும் உறுதியான சூழல் முகாமைத்துவத்தின் மூலம் இக்கைத்தொழிலின் எதிர்காலத்தினை மிளிரச் செய்வதுமே நாங்கள் நோக்காகக் கொண்டோம்.

**பொறுப்புடன் செயற்படுதல் ஒரு நிறுவனத்தின் சமூகப் பொறுப்பாகும் என்ற கருத்தில் குறிப்பிடலாம். எமது கூட்டுத்தாபனம் சமூகத்திற்கு பொறுப்புமிக்க ஒருவராகச் செயற்படுவதற்கு எப்போதும் முயற்சிக்கின்றோம். ஒழுக்கவிதிகள் நிறைந்த வர்த்தகம் அதன் ஊழியர்களின், வாடிக்கையாளரின், சமூகத்தின் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களின் ஆர்வத்தை அதிகரிப்பதற்கு முனைப்புடன் பங்களிப்பினைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.**

6. பட்டதாரி மாணவர்களுக்கு நாடு முழுதும் பயிற்சி மற்றும் ஆய்வுச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

7. பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரிமரத் தொழிற்றுறை மற்றும் அரிமர வழங்கல் குறித்து விரிவுரை நடாத்தப்பட்டது.

8. அரிமரங்களை இனங்காணல் மற்றும் உறுதிப்படுத்தும் சேவை

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆய்வுப் பிரிவிற்கு அரிமரத்தின் தரம் மற்றும் அரிமரச் சொத்துக்களுக்கு சான்றிதழ் வழங்கும் அதிகாரம் 2008 பெப்ரவரி மாதம் 25ஆந் திகதிய 1538;7 ஆம் இலக்கத்தைக் கொண்ட விசேட வர்த்தமானி மூலம் வழங்கப்பட்டுள்ளது. உண்மையான நிறை, ஈரலிப்புத் தன்மை, உள்ளடக்கம், சுருங்குதல், போரோன் பரிகரிப்பு ஆகியவற்றுக்கான வசதிகள் இப்பிரிவில் உண்டு.

9. அரிமர தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் வழங்கும் சேவைகள்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மிக முக்கிய திருப்பு முனையாக 2006இல் இரத்மலானை கல்தெமுல்லையில் அரிமரத் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமொன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தது. வன மற்றும் அரிமரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவோரின் பணியினை வலுப்படுத்துவதன் மூலம் அவர்களது கொள்ளளவை மேம்படுத்துவதற்கும் அறிவினை இற்றைப்படுத்தவதற்கும் இலங்கையின் தேசிய அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் அரிமரத் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது.











# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

*2014 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் குறித்து 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை*

මගේ අංකය / எனது இல. / My No. } ටීඑම්/අයි/එස්ටීසී/1/15/125 ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2016 මාර්තු 13 දින

16 MAR 2016

සභාපති,

රාජ්‍ය දැව සංස්ථාව

**රාජ්‍ය දැව සංස්ථාවේ 2014 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳ 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14 (2) (සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

මාගේ සමාංක හා 2015 අගෝස්තු 31 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

එච්.එම්.ගාමිණී විජේසිංහ
විගණකාධිපති

පිටපත් :- 1. ලේකම්- මහවැලි සංවර්ධන හා පරිසර අමාත්‍යාංශය
2. ලේකම් - මුදල් අමාත්‍යාංශය



விගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீஎம்/ஐ/எஸ்ரீசீ/1/15/125 ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2015 ஆகஸ்ட் 31

தலைவர்,

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

**அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2015 யூன் 16 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.





**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 16

i. ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யும் போது அவற்றின் பயன்தரு ஆயுட்காலத்தின் படி மதிப்பிடப்பட்டு பெறுமானத்தேய்வு செய்தல் மற்றும் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். இருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 905,640,314 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 5 மில்லியன் படியான கிரயப் பெறுமதி ரூபா 884,268,443 தொகையான 7020 விடயங்கள் மற்றும் தேறிய பெறுமதி பூச்சியமான ரூபா 5,827,394 கிரயமான 04 நிலையான சொத்து விடயங்களாக இருந்தன. இந்த சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாததாயின் கைதவிர்ப்பதற்கும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்க

முடியுமாயின் மீள் மதிப்பீடு செய்து நியாயப் பெறுமதியைக் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. கூட்டுத்தாபனத்தினால் நிலையான சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பிழையாக இருந்ததுடன் அதன் படி வருடாந்த பெறுமானத் தேய்வின் அளவு பிழையானதாக இருந்தது.

iii. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 76,729,723 தொகையான காணியின் பெறுமதியில் ரூபா 4,000 இனை விட குறைவான பெறுமதியுடைய ரூபா 48,648 கூட்டுப்பெறுமதியான 33 விடயங்களும் உள்ளடங்கியுள்ளது. நியமத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் காணி மீள் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட காணிகளை நியாயப் பெறுமதியில் காண்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 37

வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட குற்றங்களில் இருந்து உத்தியோகத்தர் நிரபராதியானமையினால் ரூபா 1,957,174 தொகையான நிலுவைச் சம்பளமாகச் செலுத்த வேண்டியேற்பட்ட போதிலும் அந்தப் பொறுப்புக்களுக்காக ஏற்பாடுகளை வெளிப்படுத்தல் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. “வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரின் நிலுவைச் சம்பளத்தைச் செலுத்துதல் பணிப்பாளர் சபையினால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக தொழில் ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் நிதியேற்பாடு செய்தல் அவசியமற்றது” என 2015 யூலை 13 ஆந் திகதி கூட்டுத்தாபனத்தின் தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 40

கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகக் கட்டிடத்தின் ஒரு பகுதி இரண்டு அரசாங்க நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 15,042,601 வாடகை வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும்





இந்தக் கட்டிடத்தின் பெறுமதி முதலீட்டுச் சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

நியாயமாகச் சமர்ப்பிப்பதற்காக இயலுமான வரையில் செலவின வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 3,443,573 கூட்டுத்தொகையான செலவினங்கள் நானாவித செலவினங்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய உரிமை மூலதனப்பங்கு கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 964,283,581 ஆக இருந்த போதிலும் அதற்கு நேரொத்த வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்கின் படி கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைக்க வேண்டிய உரிமை மூலதனப்பங்கு ரூபா 1,056,375,539 ஆக இருந்தது. இதன் படி கூட்டுத்தாபனத்தின் கணக்கிற்கும் திணைக்களத்தின் கணக்கிற்கும் இடையே ரூபா 92,091,958 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கண்டி, மொனராகலை பிரதேச அலுவலகங்களிலும் அம்பாறை தளபாடப் பொருள் பிரிவிற்கும் உரியதாகத் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 475 மில்லியன் முதல் ரூபா 760 மில்லியன் வரை 62 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தது. மீளாய்வாண்டின் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 43 மில்லியன் வருடமொன்றிற்கு மேற்பட்ட

காலத்திலிருந்தும், ரூபா 21 மில்லியன் 2 வருடங்களுக்கும் 3 வருடங்களுக்கும் இடையிலான காலத்திலிருந்தும், ரூபா 12 மில்லியன் 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும் அறவிடப்படாதுள்ளது.

(ஆ) 2008 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத் திணைக்களத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 568,500 தொகை மற்றும் 1983 ஆம் ஆண்டு முதல் தனியார் கம்பனியிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 11,873,954 தொகையான கடன் மீதிகள் அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட மீதிகளாகும்.

(இ) 04 பிரதேச அலுவலகங்களுக்குரிய 2013 ஆம் ஆண்டு முதல் நானாவித கடன்பட்டோர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 3,828,645 தொகையான கடன் மீதி தொடர்ந்தும் அறவிடப்பபடாது காணப்பட்டது.

(ஈ) மரங்கள் மற்றும் மர உற்பத்தி வழங்குனர்களுக்கு இறுதிக் கொடுப்பனவு செய்யும் போது வழங்கப்பட்டுள்ள முற்பணத்தைக் கழிப்பதற்கோ அல்லது பொருட்கள் வழங்கப்படாமையினால் அல்லது 01 வருடத்திற்கும் 05 வருடங்கள் வரையிலான காலம் முதல் ரூபா 3,692,862 தொகை அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது.

(உ) பொது வைப்பு மீதியின் கீழ் 4 பிரதேசங்களுக்குரிய கூட்டுத்தாபனத்திற்கு அறவிடவேண்டிய ரூபா 3,330,933 தொகையான மீதி தொடர்ந்தும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்த ரூபா 110,552 தொகையான காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் தொடர்ந்தும் அப்பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(எ) சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சிற்காக மரக் கூட்டுத்தாபனத்தினால் முன்னைய ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 1,860,952 தொகை இது வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.





(ஏ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நானாவிதக் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 128,298,983 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதிக்காக காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்படாமையினால் கடன்கொடுத்தோர் மீதியில் நிலுவையாக இருந்த கால எல்லை எவ்வளவு என வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) அனுராதபுரம் பிரதேச அலுவலகத்தில் நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 52,155,675 தொகையான உரிமை மூலதனம் இதுவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) ரூபா 19,278,900 கூட்டுத்தொகையான கேள்வி வைப்பு, பிணை வைப்பு, மற்றும் வனக் குற்றங்களுக்கான வைப்புக்களுக்குரிய தொடர்ந்தும் பொறுப்புக் காணப்படாத வைப்புக்களின் அளவு கணிப்பீடு செய்யப்பட்டு வருமானத்திற்கு செலவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) கென்க்நேல் பெற்றுக்கொள்வதற்கு வழங்குனரினால் வைக்கப்பட்ட 2 வருடங்களை விஞ்சிய ரூபா 2,855,000 தொகையான வைப்பு பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | அதிகாரச்சட்டத்தின் படி சம்பளம்/ வேதனங்கள் வழங்கப்படுகின்ற மாதத்தின் பின்னர் தொடர்ந்து வரும் அடுத்த மாதத்தின் இறுதிக்கு முன் பங்களிப்புப் பணம் நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய |

போதிலும் குறிப்பிட்ட காலப்பகுதியில் பங்களிப்புப் பணம் அனுப்பப்படாமையின் காரணமாக ரூபா 95,714 தொகை தண்டப் பணமாகச் செலுத்தப்படுகின்றது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

(i) தாபன விதிக் கோவையின் I ஆம் பகுதி

தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக கூட்டுத்தாபனத்தின் வாகனங்களை வழங்குவதற்கு தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் வழங்கப்படாதிருந்த போதிலும் தொழிற் சங்கமொன்றிற்கு 2013 ஆம் ஆண்டு முதல் வாகனமொன்று வழங்கப்பட்டிருந்தது. அந்த வாகனத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 87,120 தொகை எரிபொருளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(ii) தாபனவிதிக் கோவையின் I ஆம் பகுதியின் XXV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு

மேற்கூறப்பட்ட தொழிற்சங்கத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 1600 ஐ விஞ்சியமையினால் ஒரு உத்தியோகத்தருக்கு தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக முழுநேரம் விடுவிப்புச் செய்வதற்கு முடியுமான போதிலும், அவ்வாறான விடுவிப்பைப் பெற்றுக் கொள்ளாமல் தொழிற்சங்கத்தின் தலைவரினால் மீளாய்வாண்டின்போது 275 நாட்கள் இந்த வாகனம் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(இ) 2009 மே 26 ஆந் திகதிய DMS/A/8/27 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 39

ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்படாத மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக சம்பள அதிகரிப்பு அங்கீகரிக்கப்பட்டு மரக் கூட்டுத்தாபனத்தின் 14 உத்தியோகத்தர்





களுக்கு ரூபா 448,110 தொகையும் மேலும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 382,200 தொகையும் 2013 சனவரி முதல் 2014 யூன் வரை சம்பள அதிகரிப்பாக செலுத்தப்பட்டிருந்தது.
முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இந்தப் பணம் மீள அறவிடவேண்டியதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் 2015 மார்ச் 26 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தின் போது இந்தப் பணம் அறிவிடப்பட வேண்டியதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்தத் தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின்

(i) 2.8.4 ஆம் பிரிவு

பாரியளவிலான பெறுமதியுடைய தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது அது தொடர்பாக நிபுணத்துவம் உள்ள வெளிநபர் ஒருவர் வரிசை அமைச்சிலிருந்து அல்லது கொள்வனவு நிறுவனத்திலிருந்து வெளிக் கொள்வனவு விடயம் தொடர்பான அறிவுடைய ஒருவர் இருக்கவேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறான நபரொருவர் கொள்வனவுக் குழுவிற்காக நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 4.2.3 ஆம் பிரிவு

பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு கிடைத்து 04 வார காலத்தில் பொருள் கொள்வனவு செய்யப்படவேண்டிய போதிலும் PEZZALATO

தகடுகளை அரியும் இயந்திரத்திற்கு உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்யும் போது அதற்கு முரணாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை கிடைத்தன் பின்னர் 05 மாதங்களும் 24 நாட்களும் தாமதித்து இந்த பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விளைவுகள் வருமான வரி கணிப்பிடுவதற்கு முன் ரூபா 402,222,441 தேறிய இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமான வரி கணிப்பிடுவதற்கு முன் தேறிய இலாபம் ரூபா 332,336,761 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 69,885,680 தொகையான முன்னேற்றத்தைக் காண்பித்தது. மீளாய்வாண்டின் போது திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட பங்களிப்புப் பணம் முன்னைய ஆண்டினை விட ரூபா 25 மில்லியனால் குறைவடைந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 நிதி விளைவின் வேறுபாடுகள் தொடர்பான காலப்பகுப்பாய்வு

(அ) கூட்டுத்தாபனத்தின் அடிப்படை செயற்பாடுகளிலிருந்து ரூபா 1,453,450,911 இலாபம் உழைக்கப்பட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டின் செயற்பாட்டு இலாபமான ரூபா 1,197,615,198 உடன் ஒப்பீடு செய்தபோது 255,835,713 தொகையான அதிகரிப்பாகும்.

(ஆ) மீளாய்வாண்டில் வரிக்கு முன்னர் தேறிய இலாபம் ரூபா 427,222,441 தொகையில் ரூபா 222,826,051 தொகையான செயற்பாடற்ற வருமானம் உள்ளடங்கியிருந்ததுடன் அது வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தில் 52 சதவீதமான பாரிய அளவைக் கொண்டிருந்தது. முன்னைய ஆண்டுடன்





ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் தேறிய இலாபத்தில் 11.74 சதவீத முன்னேற்றமொன்று காணப்பட்டது.

### 3.3 கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதிவரையில் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வெளித்தரப்பினர்களினால் தொழில் நியாய சபையில் 04 வழங்குகளும், நீதவான் நீதிமன்றத்தில் 02 வழக்குகளும், மாவட்ட நீதிமன்றத்தில் 07 வழக்குகளும், உயர் நீதிமன்றத்தில் 02 வழக்குகளும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 03 வழக்குகளும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் 02 வழக்குகளும் உள்ளடங்கலாக 20 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதிவரையில் கூட்டுத்தாபனத்தினால் நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஒரு வழக்கும் பரிசீலனையில் இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரிந்த மரங்களின் விற்பனை

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி கூட்டுத்தாபனத்தினால் அரிந்த மர விற்பனையில் ரூபா 337 மில்லியன் வருமானத்தை உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான விற்பனை வருமானம் ரூபா 156 மில்லியன் அதாவது திட்டமிடப்பட்ட வருமானத்தில் 46 சதவீதம் மாத்திரமாகும். அரிந்த மர விற்பனைச் சந்தையில் காணப்பட்ட போட்டியாளர் விலைகளுடன் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காதிருந்தமை, சந்தை ஆய்வு மேற்கொண்டு விற்பனையை

அதிகரிப்பதற்கு சந்தைத் தந்திரோபாயம் பின்பற்றப்படாதிருந்தமையும் இந்த நிலைக்கு காரணமாக இருந்தன.

(ஆ) தளபாடப் பொருள் பிரிவின் செயலாற்றல்

---

(i) பூஸ்ஸ அரியும் ஆலையில் ரூபா 6,190,950 தொகை செலவில் 2013 மே மாதம் தாபிக்கப்பட்ட Finger Joint இயந்திரத்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட தளபாடப் பொருட்கள் விற்பனையிலிருந்து மீளாய்வாண்டிற்காக ரூபா 648,141 இலாபம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. இயந்திரம் தாபிக்கப்பட்ட திகதி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் வரை கருத்தில் கொள்ளக்கூடிய இலாபமொன்றை உழைப்பதற்கு தவறியிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் போது கல்தெமுல்ல தளபாட பொருள் உற்பத்தித் தொகுதியில் ரூபா 17,626,742 நட்டமொன்று பெறப்பட்டிருந்தது. உற்பத்திக் கிரயத்தை இழிவுபடுத்தாமை இந்த நட்டத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

(இ) உற்பத்தி செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம்

---

கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மரங்கள் மற்றும் மரம்சார்ந்த பொருள் உற்பத்தியின் முன்னைய சில வருடங்களுக்குரிய நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை அரிந்த மர உற்பத்தியில் 42 சதவீதக் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ii) 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை தொலைத் தொடர்பு கோபுரங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளின் உற்பத்தியில் குறைவு முறையே 62.73 சதவீதம் மற்றும் 76 சதவீதமாக இருந்தது. 2010 ஆம் ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டு வரை உற்பத்திகளில் தொடர்ச்சியான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.





(iii) தளபாடப் பொருள் உற்பத்திப் பிரிவு தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்றிருந்தது. தளபாடப் பொருட்களின் விலை அதிகரித்தனால் விற்பனை வருமானம் குறைவடைந்தமை நட்டம் கிடைப்பதற்கு பிரதான தாக்கமளித்திருந்தது.

**4.2 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வேலைத்தளங்களில் மரங்களை அரிவதற்காக கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தக்காரர் உடன்படிக்கை செய்த சந்தர்ப்பம் முதல் வேலைத்தளத்தின் வேலை முடிவுறும் வரையும் ஒப்பந்தகாரரினால் உடன்படிக்கை கைச்சாத்திட்ட பெறுமதியில் 10 சதவீதம் பிணையொன்றின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு ஈடாகக் கையளிப்பதற்கு கடப்பாடாக இருந்த போதும், ஒரு ஒப்பந்தக்காரரினால் சில ஒப்பந்தங்களைச் செய்கின்ற சந்தர்ப்பங்களில் ஒரு ஒப்பந்தம் முடிவடைவதற்கு முன்னர் அதே பிணை ஏனைய ஒப்பந்தத்திற்காகவும் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொலன்னறுவை கமு உல்பத்வெவ வேலைத்தளத்தில் மரங்களை வழங்குதல் 2013 யூலை 05 ஆந் திகதி முதல் குறுகிய வேலை உடன்படிக்கையின் மூலம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட கால எல்லைக்குள் வேலை பூர்த்தி செய்யப்படாமைக்காக தாமதத் தண்டப் பணம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புத்தளம் பிரதேச அலுவலத்தை நவீன மயப்படுத்தும் ஒப்பந்தத்திற்காக பத்திரிகை அறிவித்தலின் மூலம் கூறுவிலைகள் கோரப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த போதிலும் இதற்காக ஆறு நிறுவனங்களினால் (06) கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டமைக்கான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில் மூன்றாவது ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் குறிப்பிடப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்யாமையினால் 153 நாட்களுக்காக தாமத தண்டப் பணம் ரூபா 138,713 தொகையினை

அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஒப்பந்தத்தின் ஆரம்ப மதிப்பீட்டின் படி 623 கியூப் மண் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதில் 300 கியூப் மணல் வழங்குவதற்காக ரூபா 645,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பின்னர் 1300 கியூப் மண் வழங்குவதற்கு ஆரம்ப மதிப்பீட்டையும் விஞ்சி ரூபா 4,593,800 தொகையான மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கேள்விச் சபை அங்கிகாரமின்றி 513 கியூப் மண் மேலதிகமாக வழங்கியதற்காகவும் ரூபா 546,345 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது நிறுத்தி வைக்கப்பட்ட பணத்திற்காகவும் பெறுமதிசேர் வரியாக (VAT) ரூபா 597,718 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முன்னாள் தலைவரின் பாவனைக்காக கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட Laptop கணனியொன்று, கணனி உபபாகம், சம்சுன் கையடக்கத் தொலைபேசியொன்று (Samsung Mobile Phone Tabular) மற்றும் தொலைநோக்கியொன்று என்பன சபைக்கு மீளக்கையளிக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.4 மனித வள முகாமைத்துவம்

கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் சமர்ப்பித்திருந்த எதிர்கால நிகழ்ச்சித் திட்டத்தின் பரிசோதனையின் போது உரிய எதிர்கால நிகழ்ச்சித்திட்டத்தைச் சமர்ப்பித்தல், அங்கீகரித்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் படி கடமைகளில் ஈடுபடல் போன்ற விடயங்கள் தொடர்பாக நிர்வாகம் மிகவும் நலிவான நிலையில் காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது.





## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

கூட்டுத்தாபனத்தினால் 2013-2017 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 5.1.1 ஆம் பிரிவின் படி கூட்டிணைந்த திட்டம் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டிணைந்த திட்டத்தில் மீளாய்வாண்டிற்காக மூலதனச் செலவினம் ஆரம்பமாக 17 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அதன் கீழ் எந்த மூலதன செலவின நிகழ்ச்சித்திட்டங்களும் காண்பிக்கப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்ட ரூபா 286,440,500 தொகையான செயற்திட்டத்தில் கூட்டிணைந்த திட்டதிலுள்ள ரூபா 423,000,000 தொகை செயற்திட்டங்களுடன் இணங்கியிருக்கவில்லை. அதன் படி செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த மதிப்பீடு, கூட்டிணைந்த திட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் சகல பிரிவுகளும் அதாவது மனித வளங்கள், தகவல் மற்றும் தொழில்நுட்பம், ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி போன்ற பிரிவுகளை மேவுகை செய்யும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தில் மரக் குற்றிகளின் விற்பனைக்கும் (ஒப்பந்தம்) பாதீட்டில் மரக் குற்றிகளின் விற்பனைக்கும் (ஒப்பந்தம்) இடையே ரூபா 59,480,500 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 5.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம்

1999 நவம்பர் 19 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை, 2000 மார்ச் 30 ஆந் திகதிய பீடீ/பீஈ ஆம் சுற்றறிக்கையின் 02/2000 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் மூலம் மற்றும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய பீஈடீ/55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரமும் விளக்கமாக வெளிப்படுத்தப்பட்டதன் படி வெளிக் கணக்காய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பாக கணக்காய்வு குழுக்கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட வேண்டிய போதிலும், 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதியின் பின்னர் நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலுக்கு புறம்பாக வெளிக் கணக்காய்வு அறிக்கை/கணக்காய்வு ஐய வினாக்களின் கலந்துரையாடல் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பாதீடு, கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.





### 5.6 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பங்களாவத்தை செபல்டன் வணிக சமப்படுத்தல் நிலக்கூறில் அனுமதியற்ற மரங்களை வெட்டுவதற்கு எதிராக ஒப்பந்தக்காரர் மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் 2013 யூன் 28 ஆந் திகதி அறிவித்திருந்த போதிலும் 2015 மே 20 ஆந் திகதி வரையிலும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(இ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) பாதீடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) ஒப்பந்த நிருவாகம்
(எ) பதவியணியினர் நிருவாகம்
(ஏ) கொள்வனவுகள்

ஒப்பம்:- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)



# வருடாந்த கணக்குகள்

*2014 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது*

## விபரமான வருமானக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது | குறிப்பு | 2014 ரூபா | 2013 ரூபா |
|---|---|---|---|
| மொத்த விற்பனை | 2 | 3,473,847,448 | 2,893,748,677 |
| விற்பனை ஆகுசெலவு | 3 | (2,020,396,537) | (1,696,133,479) |
| செயற்பாடு மீதான மொத்த இலாபம | | 1,453,450,911 | 1,197,615,198 |
| முவாநச வைெழஅந | 6 | | |
| தொழிற்படு | 6.2 | 59,808,848 | 61,498,711 |
| தொழிற்பாடற்ற | 6.1 | 222,826,051 | 258,397,070 |
| மொத்த தேறிய வருமானம் | | 1,736,085,810 | 1,517,510,979 |
| விற்பனை மற்றும் விநியோகித்தல் செலவினங்கள் | 4 | (551,768,665) | (483,373,537) |
| நிர்வாகச் செலவினங்கள் | 5 | (757,094,704) | (651,800,681) |
| திறைசேரி வரியின் முன் தேறிய இலாபம | | 427,222,441 | 382,336,761 |
| திறைசேரிக்கு செலுத்திய வரிகள் | | (25,000,000) | (50,000,000) |
| திறைசேரி வரியின் பின் இலாபம் | | 402,222,441 | 332,336,761 |
| வருடத்திற்கான வருமான வரி | 7 | (196,224,578) | (150,222,702) |
| வருமான வரியின் பின் இலாபம் | | 205,997,863 | 182,114,059 |
| வேறு விபரமான வருமானங்கள் | | - | - |
| வருடத்திற்கான மொத்த விபாரமான வருமானம் | | **205,997,863** | **182,114,059** |



## நிதி நிலைமைக் கூற்று

திசெம்பர் 31ஆந் திகதியில்

| | குறிப்பு | 2014 ரூபா | 2013 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி, இயந்திரங்கள் | 8 | 905,640,314 | 906,902,528 |
| அருவச் சொத்துக்கள் | 9 | 1,634,835 | 2,237,142 |
| உயிரியல் சார் சொத்துக்கள் | 10 | 4,836,929 | 3,184,890 |
| திறைசேரி வைப்புக்கள் | | 2,966,000 | 2,966,000 |
| ஊழியர் பிணை வைப்புக்கள் | | 48,717,776 | 44,231,056 |
| முதலீடுகள் | 11.1 | 491,211,954 | 567,085,340 |
| முன்செலுத்தப்பட்ட ஊழியர் நன்மைகள் | | 43,149,305 | 46,927,158 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 7.2 | 41,757,543 | 33,396,804 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகள் | | 114,993,567 | 51,603,590 |
| மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள் | | 1,654,908,222 | 1,658,534,509 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் பதிவு | 12 | 1,068,260,904 | 988,883,042 |
| வியாபார மற்றும் வேறு கடன்பட்டோர் | 13 | 1,050,972,162 | 890,708,037 |
| அறவிடக்கூடிய வருமான வரி | 11.2 | 1,574,321,125 | 1,203,491,399 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | 14 | 311,305,958 | 70,694,647 |
| பணம் மற்றும் வங்கி மீதி | | 4,004,860,149 | 3,153,777,126 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | **5,659,768,371** | **4,812,311,635** |
| **மொத்த சொத்துக்கள்** | | | |
| **உரிமைப்பங்கு மற்றும் ஒதுக்குகள்** | | | |
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | | 75,000,000 | 75,000,000 |
| அளிக்கப்பட்ட மூலதனம | 15 | 41,503,668 | 41,503,668 |
| வருவாய் ஒதுக்கீடு | | 3,311,070,807 | 3,110,175,859 |
| | | 3,352,574,475 | 3,151,679,527 |
| ஊழியர் கடன் சுழல் நிதியம் | 16 | 230,554,340 | 225,543,133 |
| மொத்த உரிமைப்பங்கு | | 3,583,128,815 | 3,377,222,660 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வு்திய பணிக்கொடை நிதியம் | 17 | 435,931,143 | 340,599,947 |
| ஊழியர் பிணை வைப்புக்கள் | | 48,717,776 | 44,231,056 |
| மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள் | | 484,648,919 | 384,831,003 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வருமான வரி | 18 | 232,193,834 | 88,581,787 |
| கடன்வழங்குவோர் மற்றும் திரண்ட செலவு | 19 | 1,359,796,803 | 961,676,185 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | 1,591,990,637 | 1,050,257,972 |
| மொத்த பொறுப்புக்கள் | | 2,076,639,556 | 1,435,088,975 |
| மொத்த உரிமைப்பங்கும் பொறுப்புக்களும் | | **5,659,768,371** | **4,812,311,635** |

அரசாங்க மரக கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பான இக்கூற்று 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் முன்வைக்கப்பட்டுள்ளது.

பொது முகாமையாளர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

பக்க இல 87 முதல் 93 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இல 94 முதல் 103 வரையிலான கணக்குக் குறிப்புக்கள் இக்கணக்குக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும். இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் மற்றும் முன்வைக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியது. பணிப்பளார் சபை சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது.

தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
(பணிப்பாளர் சபை சார்பாக)

பணிப்பாளர்

திகதி : 2015.07.20



# உரிமைப்பங்கு மாற்றங்கள் தொடர்பிலான கூற்று

| | பங்களித்த மூலதனம ரூபா | ஊழியர் கடன் சுழலும் | தடுத்து வைத்த ரூபா | இலாபம ரூபா |
|---|---|---|---|---|
| 2013 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி | 41,503,668 | 218,784,628 | 2,935,644,568 | 3,195,932,864 |
| வருடத்தினுள் செய்யப்பட்ட செம்மையாக்கல்கள | - | (824,263) | - | (824,263) |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | - | - | 182,114,059 | 182,114,059 |
| வருடத்திற்கான ஊழியர் கடன் வட்டி | - | 7,582,768 | (7,582,768) | - |
| 2014 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி | 41,503,668 | 225,543,133 | 3,110,175,859 | 3,377,222,660 |
| வருடத்தினுள் செய்யப்பட்ட செம்மையாக்கல்கள் | - | (91,708) | - | (91,708) |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | - | - | 205,997,863 | 205,997,863 |
| வருடத்திற்கான ஊழியர் கடன் வட்டி | - | 5,102,915 | (5,102,915) | - |
| 2014 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி | 41,503,668 | 230,554,340 | 3,311,070,807 | 3,583,128,815 |

## பணப்பாய்ச்சல் கூற்று

| டிசம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது | 2014 ரூபா | 2013 ரூபா |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் பணப்பாய்ச்சல் | | |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்ற தொகை | 3,114,095,334 | 3,100,220,273 |
| வழங்குனர்களுக்கும் ஊழியர்களுக்கும் செலுத்திய தொகை | (2,679,852,677) | (2,692,082,754) |
| செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தொகை | 434,242,657 | 408,137,519 |
| வருமான வரி | (60,973,270) | (13,827,187) |
| திறைசேரிக்கு செலுத்திய விசேட வரி | (25,000,000) | (50,000,000) |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் பணப்பாய்ச்சல் | **348,269,387** | **344,310,332** |
| நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் | | |
| உயிரியல் சொத்துக்களின் அபிவிருத்தி | (113,479,867) | (329,685,077) |
| முதலீடுகள் | (1,652,039) | (3,184,890) |
| முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானம் | (294,956,339) | (385,399,827) |
| சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற தொகை | 353,965,156 | 247,383,991 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் | 6,843,786 | 9,112,038 |
| ஊழியர் கடன் சுழல் நிதியம் | (63,389,977) | 52,917,833 |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய பணப்பாய்ச்சல் | 5,011,207 | 9,707,359 |
| நிதி நடவடிக்கைகள் மூலம் பணப்பாய்ச்சல | **(107,658,075)** | **(399,148,574)** |
| பணம் மற்றும் அதற்கு சமமான சொத்துக்களின் தேறிய பெறுமானம் | - | - |
| அதிகரித்தல | 240,611,311 | (54,838,242) |
| வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் அதற்கு சமமான சொத்துக்கள் - குறிப்பு 14 | 70,694,647 | 125,532,889 |
| வருட இறுதியில் பணம் மற்றும் அதற்கு சமமான சொத்துக்கள் - குறிப்பு 14 | **311,305,958** | **70,694,647** |



# கணக்குகளுக்கான குறிப்புகள

2014 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் வருடத்திற்கானது

**01. கணக்கியற் கொள்கைகள்**

**1.1 விபரம் அளிக்கும் நிறுவனம்**

**1.1.1 கூட்டுத்தாபனமாக்கப்படல்**

1957 இல 49ஐக் கொண்ட அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ், 1968 ஏப்பிரல் மாதம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஒரு கூட்டுத்தாபனமாக தாபிக்கப்பட்டது.

**1.1.2 நிதிக் கூற்றுக்களை அறிவிப்பதற்கு அனுமதி பெற்ற தினம்**

2015, யு'லை மாதம் 20 ஆந் திகதி பணிப்பாளர் சபையில், தீர்மானிக்கப்பட்ட பணிப்பாளர் சபையின் பத்திரத்தின் படி 2014 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**1.1.3 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு**

நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் ஆகிய பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரியது.

**1.1.4 ஊழியர் எண்ணிக்கை**

2014 திசெம்பர் 31ஆந் திகதியன்று கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை 2186 ஆகும். (2013ஆம் **ஆ**ண்டில் 2,139ஆகும்)

**1.2 முன்வைத்தற் அடிப்படை**

**1.2.1 இசைவு தொடர்பான கூற்று**

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள விதந்துரைக்கப்பட்ட சட்டவிதிகள் மற்றும் இலங்கை கணக்கியற் நியமங்கள் (இலங்கை கணக்கியற் நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்) ஆகியவற்றுக்கு இணங்க, கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31ஆந் திகதியன்று மற்றும் அக்காலப் பகுதியில் முடிவடையும் வருடத்திற்கான நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமைப்பங்கின் மாற்றங்கள் பற்றிய கூற்று, பணப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றுடக் கணக்குக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**1.2.2 மதிப்பீட்டு அடிப்படை**

சரித்திர ஆகுசெலவு மரபை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**1.2.3 பாவனையிலுள்ள மற்றும் நிதிக் கூற்றுக்களை முன்வைப்பதற்கான பண அலகு**

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அது கூட்டுத்தாபன கொடுக்கல் வாங்கலில் பயன்படுத்தப்படும் பண அலகாகும். விசேடமாகக் குறிப்பிடப்படாவிடின், அனைத்து நிதித் தகவல்களும் மிக நெருங்கிய மொத்த எண்ணைப் பயன்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளன.

**1.2.4 மதிப்பீடுகளும் தீர்மானங்களும்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில், முகாமைத்துவத்திற்கு பல்வேறு திப்பீடுககககள், தீர்மானங்கள், ஊகங்கள் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியுதுடன், அவை கணக்கியற் கொள்கைகளைச் செயற்படுத்தும் போதும், அறிக்கையிடப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவினங்கள் அகியவற்றின் பெறுமானங்களில் தாக்கங்களை ஏற்படுத்தலாம். மதிப்பீடு மற்றும் அடிப்படை ஊகங்கள் என்பன முன்னைய அனுபவங்கள் மற்றும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் நியாயமானது என

நம்பும் பல்வேறு விடயங்கள் ஆகியவற்றில் தங்கியுள்ளன. உண்மையான பெறுபேறானது, மதிப்பீட்டு ஊகங்கள், தீர்மானங்கள் ஆகியவற்றை விட வேறுபடலாம். மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படும். திருத்தப்பட்ட கணக்காய்வு காலப்பகுதிக்கு அவை தாக்கத்தை ஏற்படுத்தும் எதிர்காலப் பகுதிக்காக சரிப்படுத்தப்படும்.

**1.2.5 வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம்**

வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் இலங்கை ரூபாவிற்குப் பரிவர்த்தனை செய்யப்படுவது கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற நாளில் இருக்கும் நாணயப் பெறுமதியின் அடிப்படையிலேயாகும்.

**1.2.6 வரி அறவிடல்**

கணக்குக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் வருமானங்கள் மற்றும் செலவினங்களை அடிப்படையாகக் கொண்டு 2006 இல 10ஐக் கொண்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரமாணங்களுக்கும் பிற்காலத்தில் திருத்தஞ் செய்யப்பட்டவைக்கும் இணங்க, கணக்கிட்டதன் பின் வருமான வரிக்காக ஒதுக்குகள் செய்யப்பட்டுள்ளன.

**1.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் உரிய கணக்குக் காலப்பிரிவிற்குள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**1.3.1 சொத்துக்கள் மற்றும் பெறுமதியினைக் கணக்கிடுதல்**

**1.3.1.1 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்**

**1.3.1.1.1 இனங்காணும் அடிப்படை**

சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றின் ஆகுசெலவிலிருந்து திரண்ட தேய்மானத்தையும் சேதத்துக்குள்ளான பெறுமதியினையும் கழித்துக் கணிப்பிடப்பட்டுள்ளன. (காணி மற்றும்



கட்டடங்கள் தொடர்பான நியாயமான பெறுமதியின் கீழ்) சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது, அதற்கு

நேரடியாகச் செலவாகிய செலவினங்கள் இயந்திரோபகரணங்கள், பொறித்தொகுதிகள் ஆகியவற்றின் ஆகுசெலவில் உள்ளடங்கும். சொத்துக்கள் பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றின் வேறுபட்ட பாகங்களின் பல்வேறு விளைபயனில் நீடித்த ஆயட்காலம் இருப்பின், அவை சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றின் வேறு உருப்படியாகக் கணக்கில் வைக்கப்படும். அனைத்து சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவை முதலில் ஆகுசெலவில் இனங்காணப்படும். காணி மற்றும் கட்டடங்களின் நியாயமான பெறுமதி மற்றும் முன்கொணரப்பட்ட பெறுமதி ஆகியவற்றுக்கு இடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசம் காணப்படின், அவை தொழில்வாண்மை மிக்க மதிப்பீட்டாளர்களால் மீள்மதிப்பீடு செய்யப்படும். சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் மீள்மதிப்பீட்டின் போது மொத்த சொத்துக்கள்

தொகுதியும் மீள்மதிப்பீடு செய்யப்படும். மீள் மதிப்பீட்டின் போது அதிகரிக்கும் சொத்துக்களின் முன்கொணரப்படும் பெறுமதி மீள்மதிப்பீட்டு ஒதுக்குக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதால் ஏற்படும் பெறுமதி குறைதல் அச்சொத்துக்களை முன்பொரு சந்தரப்பத்தில் செய்த சொத்துக்கள் மதிப்பீட்டின் காரணமாக ஏற்பட்ட பெறுமதி அதிகரிப்பு உள்ளடங்கிய மீள்மதிப்பீடு ஒதுக்கீட்டுக்கு ஈடுசெய்யப்படும். ஏனைய அனைத்து குறைவையும் விபரமான வருமானக் கணக்கில் செம்மைப்படுத்தப்படும்.

**1.3.1.1..2 சொத்துக்களை விற்பனை செய்வதால் ஏற்பட்ட இலாப; நட்டம்**

சொத்துக்களை விற்பனை செய்வதால் ஏற்படும் இலாபமோ அல்லது நட்டமோ (தேறிய விற்பனையின் போது

கிடைப்பனவுகளும் சொத்துக்களின் காவும் பெறுமதியின் வித்தயாசமாகக் கணக்கிடப்படும்) சொத்துக்கள் விற்பனை செய்யப்படும் ஆண்டில் வருமானக் கூற்றில் வேறு செயற்படு வருமானங்கள்; செலவினங்களின் கீழ் காட்டப்படும்.

**1.3.1.1.3 பின் ஆகுசெலவு**

நிலையான தன்மையுடன் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு அல்லது வியாபாரத்தின் ஈட்டும் கொள்ளளவினை அதிகரித்துக் கொள்வதற்கு சொத்துக்களை சுவீகரித்தல், விரிவாக்குதல் அல்லது விருத்தி செய்தல் ஆகியவற்றிற்காகச் செலவிடப்படும் பின் ஆகுசெலவுகள், மூலதனச் செலவினமாகக் கருதப்படுவதுடன், அவ்வாறான செலவினங்கள் சொத்துக்களில் முன்கொணரப்பட்ட பெறுமதியில் இனங்காணப்படும். அவ்வாறே சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் அன்றாட பராமரிப்பு ஆகுசெலவு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

**1.31.1.4 அகற்றுதல்**

சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றை அகற்றும் போது அல்லது அவற்றைப் பாவிப்பதன் மூலம் நலனேதும் கிடைக்காவிடின், அவற்றை முன்கொணரப்பட்ட பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்படும். இவ்வாறு சொத்துக்களை அகற்றும் போது ஏற்படும் இலாபமோ அல்லது நட்டமோ விபரமான வருமானக் கணக்கில் செம்மைப்படுத்தப்பட்டு இலாப வருமானமாகக் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

**1.3.1.1.5 பெறுமானத்தேய்வு**

சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பனவற்றின் எல்லா பாகங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு

விளைபயன்மிக்க ஆயட்காலம் முழுதும் நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் பதிவழிக்கப்படும். காணி

தேய்மானதத்திற்கு உட்படாததுடன், உரிய தேய்மான வீதங்கள் கீழ்வருமாறு.

| | |
|---|---|
| நிலையான கட்டடங்கள் | 2.5% |
| பகுதி நிலையான கட்டடங்கள் | 30% |
| இயந்திரோபகரணங்கள் | 10% |
| வாகனங்கள் | 20% |
| பாதைகள் மற்றும் புகையிரத பாதைகள் | 05% |
| குத்தகை நிலங்கள் | 05% |
| பாதைகள் அமைத்தல் | 10% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 15% |
| அலுவலக உபகரணங்கள் | 15% |
| பல்வேறு சொத்துக்கள் | 20% |
| கணினிகள் | 20% |

**1.3.1.2 பு'ர்த்தியடையா வேலைகள்**

நிதி ஆண்டினுள் பு'ர்த்திசெய்து கொள்ள முடியாத மூலதன முதலீட்டுகளுக்குரிய மூலதனச் செலவினங்கள் உரிய ஆண்டில் முடிவுறா வேலைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், வேலை பு'ர்த்தியாகி பாவனைக்குப் பொருத்தமான நிலைக்கு வந்தவுடன் அவற்றை சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்களின் கீழ் காட்டப்படும்.

**1.3.6 அருவச் சொத்துக்கள்**

அருவச் சொத்துக்களின் கீழ் கணினி மென்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவாகிய ஆகுசெலவு உள்ளடங்கும். அவ்வாறே இவ்வாறான அருவச் சொத்துக்கள் அதன் ஆகுசெலவை நம்பகமான முறையில் கணிப்பிட முடியுமாயின் மற்றும் அதன் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் போக்கு காணபபடும் எனின் மாத்திரம் இனங்காணப்படும். அருவச் சொத்துக்கள் ஆகுசெலவிலிருந்து திரண்ட தேய்மானத்தையும் சேதத்திற்குள்ளான திரண்ட பெறுமதியையும் கழித்து கணிப்பிடப்பட்டுள்ளன. விசேடமான சொத்தொன்று குறித்து பின்னர் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மூலதனமாக்கப்படுவது அச்செலவுகளை மேற்கொள்வதன் காரணத்திலிருந்து உரிய சொத்தில் எதிர்கால வருவாய் வளர்ச்சிக்கு அது உறுதுணையாய் இருந்தால் மாத்திரமே. தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் மதிப்பிடப்பட்டு ஐந்து வருட ஆயுட்கால முழுதும் பதிவழிக்கப்படும்.

**1.3.7 உயிரியல் சார் சொத்துக்கள்**

உயிரியல் சார் சொத்துக்கள் முதிர்ந்த உயிரியல் சார் சொத்துக்கள் எனவும் முதிர்ச்சியற்ற உயிரியல் சொத்துக்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. விளைச்சலை அறுவடை செய்யும் மட்டத்தில் காணப்படுபவை அல்லது எப்பொதும் விளைச்சலை பெற்றுக்கொள்ளும் நிலைமையில் இருப்பவையே முதிர்ந்த உயிரியல் சார் சொத்துக்கள் எனப்படுகிறது. விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடிந்த நிலைமையை அடையாமல் இருப்பவை முதிர்ச்சியற்ற உயிரியல் சார் சொத்துக்கள் எனப்படுகிறது.

உயிரியல் சார் சொத்துக்கள் விளைச்சல் கிடைக்கும் உயிரியல் சார் சொத்துக்கள் எனவும் நுகரும் உயிரியல் சார் சொத்துக்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், விளைச்சலைத் தரும் உயிரியல் சார் சொத்துக்கள் விற்பனைக்காகவும் அல்லது அறுவடை செய்வதற்காகவும் வைத்துக்கொள்ளாததவை என்பதுடன், அவை விவசாய உற்பத்திகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அபிவிருத்தி செய்யப்படும். நுகரும் உயிரியல் சார் சொத்துக்கள் வகைக்கு அரிமரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் கட்டுப்படுத்தப்படும் மரங்களும் உயிரியல்சார் சொத்துக்களினால் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளும் விவசாய உற்பத்திகளும் உயிரியல் சார் சொத்துக்களாக விற்பனை செய்யப்படுபவை உள்ளடங்குகின்றன. கடந்த கால சம்பவத்தின் பெறுபேறாக கூட்டுத்தாபனம் அவற்றை தற்காலத்தில் கட்டுப்படுத்தும் போது அவ்வுருபடிகளுடன் பிணைந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் வர்த்தகத்தினுள் உருவாகுதல் சாத்தியமாகுமெனின், மற்றும் அவற்றின் ஆகுசெலவு மற்றும் நியாயமான பெறுமதி நம்பகமான விதத்தில் அளவிட முடியுமாகையில் உயிரியல் சார் சொத்துக்களை நிறுவனம் இனங்காணும். அரிமங்களைப் பெறுவதற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ள மரங்களை முதன்முதலில் இனங்காண்பதுடன், எல்லா அறிக்கையிடும் காலப்பகுதி இறுதியிலும் இலங்கை கணக்கியற் கூற்றுக்கள்

41இன் பிரகாரம் அவற்றை நியாயமான பெறுமதியில் விற்பனை செய்வதற்கு ஏற்படும் ஆகுசெலவினை கழித்த பின்னர் கிடைக்கும் பெறுமானத்திற்கு பதியப்படும்.

எமது கணக்கீடுகளின் படி தேக்கு மரமொன்று முதிர்ச்சியடையும் காலம் கன்றினை நட்ட நாளிலிரந்து 35 வருடங்கள் வரையிலான காலம் எடுபாபதாகவும், தேக்கு மரத்தின் விஞ்ஞான ரீதியான வளர்ச்சி ஏற்படுவது அதன் ஆயட்காலம் 10 வருடங்களை விட அதிகரித்த பின்பாகும். உயிரியல் சார் வளர்ச்சிக்கு இக்காலப்பகுதியினுள் மேற்கொள்ள வேண்டிய செலவினம் போதியதாக இன்மையால், இளம் பயிர்களின் ஆகுசெலவு அவற்றின் நியாயமான பெறுமதிக்கு சமமாகக் கொள்ளப்படும்.

**1.3.1.5 முதலீடுகள்**

**1.3.1.5.1 நிலையான வைப்புக்கள் முதலீட்டு ஆகுசெலவினில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

**1.3.1.5.2 நீண்டகால முதலீட்டு ஆகுசெலவினில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

**1.3.1.5.3 அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் முதலீடுகள்**

இம்முதலீடுகள் அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு வீட்டுக் கடன் வசதிகளை வழங்குவதற்காக
மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**1.3.1.5.4 பெறுமானத் தேய்வினை மதிப்பிடுதல்**

நிதிச் சொத்துக்களின் பெறுமதி குறைவாதக விடய ஆரம்ப சான்றுகள் இருக்கின்றதா என ஒவ்வொரு அறிக்கையிடும் தினத்தில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அவ்வாறு பெறுமானத் தேய்வினால் ஏற்படக்கூடிய நட்டம் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

**1.3.1.5.5 லங்கா டிம்பர் பிலான்டேஷன் இன்டஸ்ரீஸ் நிறுவனத்தில் முதுலீடுகள்**

இம்முதலீட்டினால் எவ்வித பங்கிலாபங்களும் இல்லை. மேலும், முதலீடு செய்யபபட்டுள்ள 30 மில்லியன் ரூபா தொகையினை மீளப்பெறுவதும் நிச்சயமற்றதாக உள்ளது. அதனால், பெறுமதித் தேய்வினால் ஏற்படும் நட்டம் 30,000.000 ரூபாவாக வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

#### 1.3.1.6 நடைமுறைச் சொத்துக்கள்

பணம் மற்றும் வங்கி மீதிகளுக்கு மேலதிகமாக சாதாரண தொழிற்படு காலத்தினுள் அல்லது நிதி நிலைமைக் கூற்று திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் ஆகிய இரண்டில் குறைந்த காலத்திற்குள் பணமாகும் என எதிர்பார்க்கக்கூடிய சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாகக் கருதப்படுகின்றன.

#### 1.3.1.7 கடன்பட்டோர் மற்றும் அறவிடப்பட வேண்டியவை

வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய அறவிடப்பட வேண்டியவை அவை பணமாகுவதற்கு எதிர்பார்க்கப்படும் பெறுமதியில் குறிப்பிடப்படும். அறவிட முடியாத கடன் பதிவழிக்கப்படுவதுடன், கடன்பட்டோரினால் ஏற்படக்கூடிய நட்டங்களை ஈடு செய்வதற்காக கீழ்வருமாறு ஐயப்பாடான கடன்களுக்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

விசேட ஏற்பாடுகள்: 5 வருடத்திற்கும் கூடுதலான வியாபார கடன்பட்டோருக்கு 100%
சாதரண ஏற்பாடுகள்: 5 வருடத்திற்கும் குறைவான வியாபார கடன்பட்டோருக்கு 5%

ஒரு வருடத்திற்கு மேல் கொடுப்பனவுக் காலத்தை உடைய பணிக் குழாத்து கடன்பட்டோர் சாதாரண பெறுமானத்தில் குறிப்பிடப்படுவர். அதாவது, அப்பணிக் குழாத்து கடன்பட்டோரிடமிருந்து கிடைக்க வேண்டிய எதிர்கால பணப்பாய்ச்சலின் தறபோதைய பெறுமானமாகும். கடன் தொகையினைப் பெற்றுக் கொள்ளும் தினத்தில் மத்திய வங்கியில் பதிவுசெய்துள்ள வணிக் வங்கி கடன் கொடுக்கும் வட்டி வீதத்தினை அடிப்படையைப் பயன்படுத்தி அது கணக்கிடப்படும்.

#### 1.3.1.8 வியாபார இருப்புக்கள்

இருப்புக்கள், ஆகுசெலவு அல்லது மதிப்பிடப்பட்ட பணமாகும் பெறுமானம் ஆகிய இரண்டையும் விடக் குறைந்த்

பெறுமானத்திலேயே மதிப்பிடப்பட்டுள்ளன. அன்பளிப்பு செய்யப்பட்ட அரிமர இருப்புக்களும், மதிப்பிடப்பட்டிருப்பது ஆகுசெலவு (இருப்பு தற்பொதைய இடத்திற்கு மற்றும் தற்போதைய நிலைக்கு கொண்டு வருவதற்கு ஏற்பட்ட ஆகுசெலவு) அல்லது மதிப்பிடப்பட்ட பணமாகும் பெறுமானம் ஆகிய இரண்டையும் விடக் குறைந்த்

பெறுமானத்திற்காகும். முதலில் பெறுதல் முதலில் வழங்குதல் என்ற அடிப்படையிலேயே ஆகுசெலவு முடிவு செய்யப்படுவதுடன், இருப்புக்களைத் தற்போதைய இடத்திற்கு மற்றும் நிலைக்கு கொண்டு வருவதற்காக ஏற்படும் அனைத்து செலவினங்களும் ஆகுசெலவிற்குள் அடங்கும். உற்பத்தி சம்பந்தமான ஆகுசெலவிற்குள் அனைத்து நேரடி செலவுகளும் சாதாரண செயற்பாட்டு மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி மேந்தலைச் செலவுகளும் அடங்கும். தேவையான சந்தர்ப்பங்களில் காலங் கடந்த, மந்தமான நிலையில் விற்பனையாகும் அல்லது தரங்குறைந்த இருப்புக்களுக்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இருப்புக்கள் அழிவுக்குள்ளாவதற்கு 15% ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது.

### 1.3.2 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புகக்ளின் கீழ், கோரியவுடன் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள்

அல்லது நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருடதத்திற்குள் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் அடங்குகின்றன. நடைமுறையற்ற பொறுப்புக்களாவன நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருடத்தை விடக் கூடுதலான காலத்தினுள் செலுத்த வேண்டிய பணமாகும். நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் கணக்கு வைக்கப்பட்டுள்ளன.



#### 1.3.2.1 வியாபார மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள்

வியாபார மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள் உரிய ஆகுசெலவின் படி குறிப்பிடப்பட்டுள்ளன.

#### 1.3.2.2 ஓய்வு‘தியப் பணிக்கொடை

1983, 12ஆம் இலக்கத்தைக் கொண்ட ஓய்வு‘தியப் பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம் தொடர்ச்சியாக 05 வருடத்தை விடக் கூடுதலான சேவைக்காலத்தைப் பு‘ர்த்தி செய்திருக்கும் ஊழியர்கள் ஓய்வு‘தியப் பணிக்கொடையைப் பெற உரித்துடையவராவர். எனினும் அனைத்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்காகவும் 2013

திசெம்பர் 31ஆந் திகதியுடன் பு‘ர்த்தி செய்துள் சேவைக்காலம் மற்றும் இறுதியாகப் பெற்ற சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் ஓய்வு‘தியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய ஓய்வு‘தியக் கொடுப்பனவுகளை எளிதாக்கும் விதத்தில் கூட்டுத்தாபனம் மக்கள் வங்கி நிலையாயன வைப்புக் கணக்கில் முதலீடு செய்துள்ளது.

#### 1.3.2.3 எதிர்பாரா பொறுப்புக்கள்

பணத்தால் மதிப்பிடக் கூடிய அனைத்து பொறுப்புக்களுக்கும் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய
பொறுப்புக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட கிரியோசோட் எண்ணெய்யில் காணப்பட்ட ஒவ்வாத தன்மை காரணமாக வழங்குனருடன் கருத்து வேறுபாடு கொண்டதுடன், அதன் விளைவாக 54,490.51 அமெரிக்க டொலர் பெறுமதிமிக்க கடன் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை விடுவிக்கப்படவில்லை. இந்த முரண்பாடு தீரும் வரை வங்கி குறிப்பிட்ட தொகையைத் தடுத்து வைத்துள்ளது. பொகவந்தலாவை செப்பல்ரன் வர்த்தக மெல்லியதாக்கல் காணிப் பரப்பில் அனுமதியின்றி மரங்களை வெட்டுவதால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் போது வெளியாகியுள்ள சில விடயங்களின் காரணமாக இன்னும் உறுதியான முடிவொன்றை எடுக்க முடியாதாகையால், கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுடன் ஒன்று சேர்ந்து இவ்விடயம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என வன பாதுகாப்பு தலைமை அதிபரி அவர்கள் தீர்மானித்துள்ளார்.

வன பாதுகாப்பு திணைக்களத்தினால் அரசாங்க மரக் கூட்டுத்தாகனத்திற்கு எதிராக தெஹிஅத்தகண்டிய நீதவான் நீதிமன்றத்தில் ரம்பகென்ஓய நீர்த்தேக்கத்திற்கு முழ்கடிக்கப்படும் நிலப்பரிப்பில் அரங்களை அகற்றுகையில் ஏற்பட்ட முறைகேடுகள் காரணமாக பீ அறிக்கையொன்று முன்வைக்கப்படினும், கூட்டுத்தாபனத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு நிலைமை குறித்து விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது வரையில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

### 1.3.3 விபரமான வருமானக் கூற்று

விபரமான வருமானக் கூற்றைத் தயாரித்து முன்வைப்பதற்கான செயற்பாடுகளுக்கேற்ப செலவினங்கள் வகைப்படுத்தல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு செய்வதற்கு காரணம் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை நியாயமானதாகத் தெரிவதால் ஆகும். திரண்ட அடிப்படையில் வருமானமும் செலவினமும் இனங்காணப்பட்டுள்ளன.

**1.3.3.1 வருமானங்களை இனங்காணல்**

அரிமரங்களை விற்பதன் மூலம் கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய தொகை, வர்த்தகக் கழிவுகள் மற்றும் அளவுகளுக்காகக் கொடுத்த சலுகை ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு, நியாயமான பெறுமதியின் அடிப்படையில் அரிமரங்களை விற்பதன் மூலம் கிடைத்த வருமானம் கணிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் ஊழியர்களுக்கு 25மூ சலுகை விலையில் அரிமரங்களை விற்பதுடன், இச்செலவுகள் நலன்புரி வசதிகள் செலவினங்கள் தலைப்பின் கீழ் கணக்கிலிடப்பட்டுள்ளது.

**1.3.3.2 செலவினங்களை இனங்காணல்**

வருடத்திற்குள் கிடைத்திருக்கும் இலாபத்தைக் கணக்கிடுகையில் வருடத்திற்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செலவிடப்பட்ட அனைத்து செலவினங்களும் வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டுள்ளன. சீர்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் ஆகியவற்றுக்குரிய செலவினங்கள் அவை நிகழ்ந்த வருடத்தில் விபரமான வருமானக் கூற்றில் கணக்கு வைக்கப்பட்டுள்ளன.

**1.3.3..2.1 வருமான வரி**

வருமான வரி நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளைக் கொண்டது. உரிமைப்பங்கு அல்லது வேறு விபரமான வருமானங்களினூடாக இனங் காணப்படும் உருப்படிகளுக்குரிய அளவினைத் தவிர நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட
வரிச் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் இனங் காணப்படும்.

அறிக்கையிடும் தினத்தில் நடைமுறையில் இருக்கும் வரி வீதம் மற்றும் முன்னைய வருடத்திற்காக ஒதுக்குகளைப் பயன்படுத்திக் கொண்டு, வருடத்தின் வரி வருமானம் அல்லது நட்டங்கள் மீதான செலுத்த

சேலுத்த வேண்டிய அல்லது கிடைக்க வேண்டிய எதிர்பார்க்கப்படும் வரித் தொகை நடப்பு வரி எனக்

கொள்ளப்படுகின்றது. வருமான வரி வீதம் 28% ஆவதுடன், ஐயப்பாடான பங்கிலாப வரி வீதம் 25% ஆகும்.

நிதி அறிக்கையிடுதலுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் முன்கொணரப்பட்ட மீதி மற்றும் வரித்தொகைக்கு இடையில் தற்காலிக வித்தியாசத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பொறுப்புக்கள் முறைமை பாவனையின் மூலம் பிற்போடப்பட்ட வரித் தொனைக் கணக்கிடப்படும். நிதி நிலைமைக் கூற்று தினத்தில் நடைமுறையில் இருக்கும் வரி வீதத்தினைப் பயன்படுத்தி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் முன்கொணரப்பட்ட தீர்க்கப்பட வேண்டிய மீதி அல்லது எதிர்பார்க்கும் பணமாக்கப்படும் தொகையின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரித்தொகை கணக்கிடப்படும்.

எதிர்கால சொத்துக்களில் நுகரக்கூடிய பெறுமதிக்கு எதிராக எதிர்காலத்தில் வரி இலாபத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக நிகழ்தகவு காணப்படின், அத்தொகைக்கு மாத்திரம் பிற்போடப்பட்ட வரிச் சொத்து இனங்காணப்படும். சொத்துக்குரிய வரி வருவாயை மேலும் பெற்றுக் கொள்வதற்கு முடியாதெனின், அத்தொகைக்கு பிற்போடப்பட்ட வரிச் சொத்து பெறுமதி இறக்கஞ் செய்யப்படும்.

**1.3.3..2.2 உரிமைப்பங்குகளைச் செலுத்துதல்**

2014 ஆம் வருடத்திற்கான உரிமைப்பங்கு வெட்டப்பட்ட அரிமரக் கனவளவு அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.



**1.3.3.2.3 செலவு ஒதுக்கீடு**

மர ஆகுசெலவு மற்றும் அரிவாலைகளின் செலவு மாற்றம் என்பன மர இடமாற்றப் பெறுமதியின் அடிப்படையில் ஒதுக்கப்படுவதுடன், உரிய அலகுகளுக்கு எடுத்துச் செல்லும் வாடகைப் பெறுமானத்தின் அடிப்படையில் இயந்திரப் பட்டறையின் ஆகுசெலவு ஒதுக்கப்படும்.

**1.3.4 நிதி நிலைமைக் கூற்றுத் தினத்திற்குப்பின்னரான நிகழ்வுகள்**

நிதி நிலைக் கூற்று தயாரித்த தினத்திற்கு பின்னர் குறிப்பிடத்தக்க அனைத்து நிகழ்வுகளையும் கவனத்திற் கொண்டு, நிதிக் கூற்றுக்களில் உரிய குறிப்பின் கீழ் பொருத்தமான செம்மைப்படுத்தல் அல்லது ஈடுசெய்தல் மேற்கொள்ளப்பட்டன.

**1.3.5 ஊழியர் கடன் சுழல் நிதியம்**

இந்நிதியம் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு கடன் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஊழியர் கடன்வட்டி வருமானம் ஏனைய வருமானங்களின் கீழ் விபரமான வருமானக் கூற்றில் தெரிவிக்கப்பட்டு, வருமான வரியினைக் கழித்ததன் பின்னர் தேறிய வட்டி வருமானம் ஊழியர் கடன் சுழல் நிதியத்திற்கு மாற்றப்படும்.

இதன் மூலம், ஊழியர் கடன் சுழல் நிதியம் கட்டியெழுப்பப்படுவதுடன், கடனைப் பெற்றுக்கொடுப்பது நிதியத்தில் உள்ள பணத்தொகையின் அளவில் மட்டுப்படுத்தப்படும்.

**1.3.6 பணப்பாய்ச்சல் கூற்று**

பணப்பாய்ச்சல் கூற்று தொடர்பான இலங்கைக் கணக்கியற் கொள்கை 07இன் பிரகாரம் நேரடி முறையைப் பயன்படுத்தி பணப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. பணம் மற்றும் பணத்திற்கு சமமான சொத்துக்களின் பெறுமதி மாற்றங்களிலான அபாயத்தின் கீழ் விரைவாகப் பணமாக மாற்றிக் கொள்ளக் கூடிய உயர் திரவத்தன்மைமிக்க குறுங்கால முதலீடுகள் உள்ளடங்கும். பணம் மற்றும் பணத்திற்குச் சமமான சொத்துக்களில் கையிலிருக்கும் பணமீதி, வங்கிமீதி, வங்கிகளில் உள்ள குறுங்கால வைப்புக்கள் உள்ளடங்கும்.

## கணக்குகளுக்கான குறிப்புக்கள்

| 02.மொத்த விற்பனை | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| குற்றிகள் - அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற | 1,774,835,926 | 1,543,389,558 |
| குற்றிகள் - தனியார் காணிகளிலிருந்து பெற்ற | 41,521,752 | 22,276,964 |
| மரத்துண்டங்கள் | 156,140,096 | 170,298,367 |
| சிலீப்பர்கள் - தனியார் காணிகளிலிருந்து பெற்ற | 324,619,571 | 218,085,380 |
| சிலீப்பர்கள் - அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற | 155,478,174 | 234,746,032 |
| சிலீப்பர்கள் - ஏற்றுமதி | 48,297,160 | - |
| மின் கம்பங்கள் - அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற | 142,153,826 | 208,271,838 |
| மின்கம்பங்கள் - தனியார் காணிகளிலிருந்து பெற்ற | 195,127,486 | 4,511,925 |
| யானை வேலிக் கம்பங்கள் | 88,672,100 | 86,554,236 |
| ஏனையவை | 24,737,684 | 24,707,962 |
| சட்டரீதியற்ற காட்டு அரிமரங்கள் | 37,669,004 | 39,668,133 |
| அரச காணிகளிலிருந்து அன்பளிப்பு செய்யப்பட்ட அரிமரங்கள் | 315,497,163 | 201,425,749 |
| தளபாடங்கள் | 238,318,417 | 198,529,090 |
| மொத்த விற்பனை | 3,543,068,359 | 2,952,465,235 |
| நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வரி | (69,220,911) | (58,716,558) |
| கூட்டுத்தொகை | **3,473,847,448** | **2,893,748,677** |

| **03.** விற்பனைச் செலவு | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| அரிமரக் களஞ்சிய சாலைகள், சாலையோரக் களஞ்சிய சாலைகள் | 906,772,371 | 723,341,531 |
| அரிமரப் பரிகரிப்பு நிலையங்கள் | 661,198,073 | 604,406,762 |
| தளபாடப் பொறித் தொகுதிகள் | 165,251,217 | 146,648,802 |
| சாலையோர விற்பனைகள் | 287,174,876 | 221,736,385 |
| கூட்டுத்தொகை | **2,020,396,537** | **1,696,133,479** |

| **04.** விற்பனை மற்றும் விநியோகச் செலவினங்கள் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| களஞ்சிய சாலைகள் | 505,088,613 | 447,078,988 |
| அரிமரப் பரிகரிப்பு நிலையங்கள் | 7,209,147 | 9,821,782 |
| தளபாடப் பொறித் தொகுதிகள் | 27,587,476 | 17,327,761 |
| பிராந்திய முகாமைத்துவ அலுவலகம், பிரதான அலுவலகம் | 11,883,430 | 9,145,006 |
| கூட்டுத்தொகை | **551,768,665** | **483,373,537** |



| 05. நிர்வாகச் செலவினங்கள் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| அரிமரப் பரிகரிப்பு நிலையங்கள் | 38,127,030 | 22,184,888 |
| தளபாடப் பொறித் தொகுதிகள் | 29,144,333 | 24,573,880 |
| பிராந்திய முகாமைத்துவ அலுவலகம், பிரதான அலுவலகம் | 683,100,131 | 597,934,435 |
| உல்லாச பங்களா | 6,723,210 | 7,107,478 |
| கூட்டுத்தொகை | **757,094,704** | **651,800,681** |

| 06. ஏனைய வருமானங்கள் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| 6.1 தொழிற்படா வருமானம் | | |
| வட்டி வருமானம் - முதலீடு | 197,513,358 | 226,670,712 |
| வெளிநாட்டு நாணயமாற்றம் இலாப ;(நட்டம்) | 1,136 | 4,723 |
| கட்டட வாடகை | 15,042,601 | 14,991,686 |
| பணிக்கொடை மேலதிக ஒதுக்கீடு | - | 6,198,327 |
| ஊழியர் கடன் வட்டி | 10,268,957 | 10,531,622 |
| | **222,826,051** | **258,397,070** |
| 6.2 தொழிற்படு வருமானம் | | |
| நானாவித வருமானங்கள் | 20,952,428 | 38,025,841 |
| தண்டப்பணம்- ஒப்பந்தக்கரரிடமிருந்தும் வழங்குனரிடமிருந்தும் | 568,079 | 543,947 |
| சொத்துக்கள் விற்பனையால் பெற்ற வருமானம் | 6,474,636 | - |
| இருப்புக்கள் சேதத்திற்கான மேலதிக ஒதுக்குகள் | 27,245,757 | 10,046,557 |
| ஐயப்பாடான கடன் மேலதிக ஒதுக்கீடுகள் | 2,003,952 | 9,894,147 |
| பழுதுகள் மற்றும் இழப்புகளுக்கான அறவீடுகள் | 1,153,737 | 1,000,453 |
| மீளச் செலுத்தாத விலைமனு வைப்புக்கள் | 1,410,260 | 1,987,765 |
| | 59,808,848 | 61,498,711 |
| கூட்டுத்தொகை | **282,634,899** | **319,895,781** |

6.3 ஏனைய வருமானங்களின் பகுப்பாய்வு 2014

| வருமான மூலங்கள் | விற்பனைக் களஞ்சியசாலை | அரிமரப் பரிகரிப்பு நிலையம் | தளபாட உற்பத்தி அலகு | உல்லாச பங்களா | பிராந்திய அலுவலகம், பிரதான அலுவலகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| தொழிற்படா வருமானம் | | | | | | |
| வட்டி வருமானம் - முதலீடு | - | - | - | - | 197,513,358 | 197,513,358 |
| வெளிநாட்டு நாணயமாற்றம் இலாப ;(நட்டம்) | - | - | - | - | 1,136 | 1,136 |
| கட்டட வாடகை | - | - | - | - | 15,042,601 | 15,042,601 |
| பணிக்கொடை மேலதிக ஒதுக்கீடு | - | - | - | - | - | - |
| ஊழியர் கடன் வட்டி | - | - | - | - | 10,268,957 | 10,268,957 |
| | - | - | - | - | 222,826,051 | 222,826,051 |
| தொழிற்படு வருமானம் | 60,679 | - | - | 1,032,931 | 19,858,818 | 20,952,428 |
| நானாவித வருமானங்கள் | - | - | - | - | 568,079 | 568,079 |
| தண்டப்பணம்- ஒப்பந்தக்கரரிடமிருந்தும | - | - | - | - | 6,474,636 | 6,474,636 |
| வழங்குனரிடமிருந்தும் | 18,191,286 | 8,991,622 | 62,849 | - | - | 27,245,757 |
| சொத்துக்கள் விற்பனையால் பெற்ற வருமானம் | 1,873,827 | - | 130,125 | - | - | 2,003,952 |
| இருப்புக்கள் சேதத்திற்கான மேலதிக ஒதுக்குகள் | - | - | - | - | 1,153,737 | 1,153,737 |
| பழுதுகள் மற்றும் இழப்புகளுக்கான அறவீடுகள் | - | - | - | - | 1,410,260 | 1,410,260 |
| மீளச் செலுத்தாத விலைமனு வைப்புக்கள் | | | | | | |
| | 20,125,791 | 8,991,622 | 192,973 | 1,032,931 | 29,465,530 | 59,808,848 |
| கூட்டுத்தொகை | 20,125,791 | 8,991,622 | 192,973 | 1,032,931 | 252,291,582 | 282,634,899 |



| 07. வருமான வரி | 2014 ரூபா | 2013 ரூபா |
|---|---|---|
| நடப்பு வரிச் செலவு | | |
| நடப்பு ஆண்டிற்கான வருமான வரி | 202,347,540 | 131,882,763 |
| முன்னைய ஆண்டிற்கான கூடிய ;குறைந்த ஒதுக்கீடு | 2,237,777 | - |
| | 204,585,317 | 131,882,763 |
| பிற்போடப்பட்ட வரிச் செலவு | | |
| தற்காலிக மாற்றங்களின் மீண்டெழுபவை மற்றும் மூலாரம்ப | (8,360,739) | 18,339,939 |
| | (8,360,739) | 18,339,939 |
| ஆண்டிற்கான வரி அறவீடுகள் | **196,224,578** | **150,222,702** |

| 7.1 நடப்பு ஆண்டில் இலாபத்திற்கான வருமான வரி | 2014 ரூபா | 2013 ரூபா |
|---|---|---|
| இலாபத்திற்கு முன்னரான வரி | 402,222,441 | 332,336,761 |
| மொத்த அனுமதிக்கப்படா செலவுகள் | 293,664,679 | 103,786,686 |
| மொத்த அனுமதிக்கப்பட்ட செலவுகள் | (423,720,740) | (445,416,408) |
| வியாபரஞ்சார் இலாபம் | 272,166,380 | (9,292,961) |
| வியாபாரமற்ற வருமானம | 212,557,094 | 241,667,122 |
| வரி அறவிடக்கூடிய வருமானம் | 484,723,474 | 232,374,161 |
| வருமான வரியிலிருந்து 28மூ | 135,722,573 | 65,064,764 |
| பகிர்ந்தளிக்கக்கூடிய இலாபத்தின் மீதான பங்கிலாப வரி | 66,624,967 | 66,817,999 |
| கூட்டுத்தொகை | **202,347,540** | **131,882,763** |

| 7.2 பிற்போடப்பட்ட வரி | தற்காலிக வித்தியாசம் ரூபா | வரிப் பாதிப்பு (சொத்து;பொறுப்பு) ரூபா |
|---|---|---|
| 2014 ஜனவரி 1ஆந் திகதியில் மீதி | (119,274,300) | (33,396,805) |
| வருடத்தினுள் உருவாகிய தொகை | (29,859,781) | (8,360,739) |
| 2014 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி | **(149,134,081)** | **41,757,543** |
| | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களின் தற்காலிக வித்தியாசம் | 286,797,062 | 80,303,177 |
| இளைப்பாற்றுப் பணிக்கொடை நிதியத்தின் தற்காலிக வித்தியாசம | 435,931,143 | 122,060,720 |
| முன்கொணரப்பட்ட வரி நட்டம் | - | - |
| 2014 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி | **149,134,081** | **41,757,543** |

08. சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

| தேய்மானங்கள் | ஆகுசெலவு 2014.01.01. திகதியில் மீதி | கூட்டல்கள் | அகற்றுதல | 2014.12.31 திகதியில் மீதி | தேய்மானங்கள் 2014.01.01. திகதியில் மீதி | அகற்றுதல் | ஆண்டிற்கான அறவீடுகள் | 2014.12.31 திகதியில் மீதி | 2014.12.31 திகதியில் முன்கொணரப்பட்ட மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காணிகள் | 76,578,723 | 151,000 | - | 76,729,723 | - | - | - | - | 76,729,723 |
| கட்டடங்கள் | 598,650,288 | 31,703,527 | - | 630,353,815 | 142,280,567 | - | 13,069,781 | 155,350,348 | 475,003,467 |
| அரிமரக் கொட்டகைகள், ஏனைய கட்டடங்கள் | 19,256,777 | - | - | 19,256,777 | 17,316,104 | - | 921,514 | 18,237,618 | 1,019,159 |
| பாதைகளும் புகையிரதப் பாதைகளும் | 16,598,376 | 81,000 | - | 16,679,376 | 4,989,039 | - | 793,684 | 5,782,723 | 10,896,653 |
| இயந்திரோபகரணங்கள் | 625,899,259 | 22,868,809 | 9,215,299 | 639,552,770 | 461,553,537 | 9,215,279 | 26,628,107 | 478,966,365 | 160,586,405 |
| குத்தகைக்குரிய காணிகளும் கட்டடங்களும் | 148,311 | - | - | 148,311 | 148,311 | - | - | 148,311 | - |
| பாதைகளை அமைக்கும் இயந்திரங்களும் உபகரணங்களும் | 60,450 | - | - | 60,450 | 60,450 | - | - | 60,450 | - |
| ஆயுதங்களும் உபகரணங்களும் | 5,148,263 | 496,965 | - | 5,645,229 | 4,725,977 | - | 153,170 | 4,879,147 | 766,082 |
| மின்சார உபகரணங்கள் | 13,453,576 | 1,547,389 | 20,260 | 14,980,705 | 7,297,534 | 20,245 | 909,405 | 8,186,694 | 6,794,011 |
| வாகனங்கள் | 502,191,357 | 44,895,249 | 6,617,552 | 540,469,054 | 361,905,392 | 6,248,673 | 58,449,227 | 414,105,946 | 126,363,108 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 35,388,711 | 4,273,796 | 97,904 | 39,564,603 | 17,262,862 | 97,699 | 4,116,775 | 21,281,938 | 18,282,665 |
| அலுவலக உபகரணங்கள் | 30,919,882 | 2,005,394 | 441,145 | 32,484,131 | 23,907,971 | 441,125 | 1,765,325 | 25,232,171 | 7,251,960 |
| கணினிகளும் உதிரிப்பாகங்களும் | 52,162,537 | 4,219,689 | - | 56,382,226 | 34,758,738 | - | 5,555,217 | 40,313,955 | 16,068,271 |
| நானாவித சொத்துக்கள் | 20,890,234 | 1,237,048 | 8,019 | 22,119,263 | 14,237,734 | 8,009 | 2,010,727 | 16,240,452 | 5,878,811 |
| முன் நிர்மாணிக்கப்பட்ட கட்டமைப்புக்கள் | 4,938,333 | - | - | 4,938,333 | 4,938,333 | - | - | 4,938,333 | - |
| குத்தகைக்குரிய காணிகள் - இரத்தினபுரி | 680,300 | - | - | 680,300 | 680,300 | - | - | 680,300 | - |
| கூட்டுத்தொகை | 2,002,965,376 | 113,479,868 | 16,400,180 | 2,100,045,065 | 1,096,062,849 | 16,031,030 | 114,372,932 | 1,194,404,750 | 905,640,314 |

* அறிக்கையிடும் நாளாகையில் ஆகுசெலவு 890,095,837.00 ரூபாவான முழுதாக கழிக்கப்பட்ட சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொகையொன்று கூட்டுத்தாபனத்திற்கு உரியதாகும்.

09. அருவச் சொத்துக்கள்

| விபரம் | ஆகுசெலவு 2014.01.01. திகதியில் மீதி | கூட்டல்கள் | அகற்றுதல் | 2014.12.31 திகதியில் மீதி | தவணைமுறைக் கடன் கரைப்பு 2014.01.01. திகதியில் மீதி | அகற்றுதல் | ஆண்டிற்கான அறவீடுகள் | 2014.12.31 திகதியில் மீதி | 2014.12.31 திகதியில் முன்கொணரப்பட்ட மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணினி மென்பொருள்கள் | 3,011,537 | - | - | 3,011,537 | 774,395 | - | 602,307 | 1,376,702 | 1,634,835 |
| கூட்டுத்தொகை | 3,011,537 | - | - | 3,011,537 | 774,395 | | 602,307 | 1,376,702 | 1,634,835 |

## 10. உயிரியல்சார் சொத்துக்கள்

கூட்டுத்தாபனத்திற்குரிய தேக்கு மரப் பயிர்ச்செய்கை அமைந்துள்ள இடங்கள் பின்வருமாறு.
புளியங்குளம்
மதவாச்சி
செவனபிட்டி
வினீத்தகம



## 11. முதலீடுகள்

| 11.1 முதலீடுகள் - நீண்ட கால<br>திசெம்பர் 31ஆந் திகதியில | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| **நிலையான வைப்புக்களில் முதலீடு** | | |
| மக்கள் வங்கி | - | 117,100,000 |
| அரச நிறுவனங்களில் தற்காலிக் நிதியக் கணக்கு | 360,226,630 | 338,010,495 |
| அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 130,485,324 | 81,474,846 |
| | 490,711,954 | 536,585,340 |
| **பங்குகளில் முதலீடு** | | |
| காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்திச் சபை | 500,000 | 500,000 |
| வரையறுக்கப்பட்ட லங்கா ரிம்பர் பிலான்டேஷன் நிறுவனம் | 30,000,000 | 30,000,000 |
| (-) முதலீட்டு பெறுமதி இழப்பு | (30,000,000) | |
| | 500,000 | 30,500,000 |
| கூட்டுத்தொகை | **491,211,954** | **567,085,340** |

| 11.2 முதலீடுகள் - குறுகிய கால<br>திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014<br>Rs. | 2013<br>Rs. |
|---|---|---|
| **நிலையான வைப்புக்களில் முதலீடு** | | |
| மக்கள் வங்கி | 696,410,412 | 694,408,552 |
| இலங்கை வங்கி | 877,910,713 | 509,082,847 |
| கூட்டுத்தொகை | 1,574,321,125 | 1,203,491,399 |

## 12. இருப்புக்கள்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| வியாபார இருப்புக்கள் | 919,995,872 | 899,863,184 |
| இருப்புக்களின் சேதத்திற்கான ஒதுக்கீடுகள் | (116,548,545) | (118,981,084) |
| | 803,447,327 | 780,882,100 |
| எடுத்துச் செல்லப்படும் இருப்புக்கள் | 76,743,448 | 45,141,546 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் | 36,902,197 | 21,137,014 |
| களஞ்சியசாலைப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 104,376,621 | 107,385,216 |
| பரிகரிப்புச் செய்வதற்கான பதார்த்தங்கள் | 27,987,940 | 20,049,766 |
| எரிபொருள் மற்றும் எண்ணெய் | 2,590,469 | 2,903,761 |
| காகிதாதிகள் | 16,212,901 | 11,383,639 |
| கூட்டுத்தொகை | 1,068,260,904 | 988,883,042 |

12.1 இருப்புக்களின் பகுப்பாய்வு

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற குற்றிகள் | 477,644,908 | 513,390,101 |
| அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற மரத்துண்டங்கள் | 196,148,449 | 166,901,181 |
| தனியார் காணிகளிலிருந்து பெற்ற குற்றிகள் | 669,081 | 1,962,491 |
| அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற சிலீப்பர்கள் | 103,896 | 67,246,138 |
| தனியார் காணிகளிலிருந்து பெற்ற சிலீப்பர்கள் | 1,377,702 | 22,816,418 |
| அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற மின் கம்பங்கள் | 49,274,718 | 11,341,942 |
| தனியார் காணிகளிலிருந்து பெற்ற மின்கம்பங்கள் | 38,529,211 | - |
| ஏனையவை | 13,242,339 | 9,548,955 |
| தளபாடங்கள் | 143,005,568 | 106,655,959 |
| கூட்டுத்தொகை | **919,995,872** | **899,863,184** |

13. வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வியாபாரக் கடன்பட்டோர் | 760,981,262 | 475,392,716 |
| ஐயப்பாடான கடன் ஒதுக்கீடுகள் | (49,869,309) | (35,589,882) |
| | 711,111,953 | 439,802,834 |
| பணிக்குழாத்தினரின் கடன | 162,274,544 | 158,191,032 |
| வேறு கடன்பட்டோர | 17,898,395 | 19,995,516 |
| வைப்புக்கள் மற்றும் முன் கொடுப்பனவுகள் | | |
| உள்நாட்டுக் கொள்வனவு முற்பணம் | 38,659,265 | 16,332,025 |
| முன்கொடுப்பனவுகளுக்கான முற்பணம் | 29,189,005 | 24,903,941 |
| அரிமரங்களை வழங்கும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்திய முற்பணம் | 13,001,712 | 7,533,576 |
| வைப்புக்களுக்காக கிடைக்க வேண்டிய வட்டி | 57,683,002 | 206,023,255 |
| திருப்பி அனுப்பப்பட்ட காசோலைகள் | 110,552 | 29,928 |
| கதிர்காம அஷ்டபல நிதியம் | 1,000,000 | 1,037,000 |
| நீதிமன்ற வைப்புக்கள் | 8,752,033 | 8,752,032 |
| சுற்றாடல் அமைச்சு | 3,817,263 | 6,886,714 |
| வனப் பாதுகாப்பு திணைக்களம் | 6,910,741 | 322,398 |
| அறவிடக்கூடிய கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரி | - | 293,689 |
| துறைமுக அதிகார சபை | 563,698 | 604,095 |
| கூட்டுத்தொகை | **1,050,972,162** | **890,708,037** |



13.1 வேறு கடன்பட்டோர்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| நானாவிதக் கடன்பட்டோர் | 3,828,645 | 4,861,555 |
| பொது வைப்புக்கள் | 14,433,370 | 15,480,581 |
| பொது வைப்புக்களுக்கான ஒதுக்குகள் | (366,620) | (366,620) |
| விலைமனு வைப்புக்கள் | 3,000 | 20,000 |
| கூட்டுத்தொகை | **17,898,395** | **19,995,516** |

13.2 பணிக்குழாத்தில் கடன்பட்டோர்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| பணிக்குழாத்தினரின் கடன் | | |
| வாகனக் கடன் | 3,899,083 | 4,681,265 |
| இடர்க் கடன் | 112,815,515 | 122,716,321 |
| மின் உபகரணக் கடன் | 50,067 | 156,973 |
| மிதிவண்டிக் கடன் | 1,527,351 | 1,672,180 |
| மடிக்கணினி கடன் | 35,085,981 | 21,626,814 |
| தளபாடக் கடன் | 1,945,513 | 2,440,004 |
| | 155,323,510 | 153,293,558 |
| முற்பணம் மற்றும் வேறு கடன் | | |
| சம்பளம் மற்றும் படிகள் முற்பணம் | 7,900 | 9,500 |
| பயணச் செலவு முற்பணம் | 45,687 | 70,945 |
| பண்டிகை முற்பணம் | 4,239,279 | 2,183,467 |
| உள்ளகக் கடன் குறிப்புக்கள் | 1,767,994 | 2,296,463 |
| ஊழியர் அறவீடுகள் | 790,174 | 215,879 |
| துணிமணிக் கடன் | 100,000 | 121,220 |
| | 6,951,034 | 4,897,474 |
| கூட்டுத்தொகை | **162,274,544** | **158,191,032** |

14. பணம் மற்றும் வங்கி மீதி

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கையிலுள்ள பணம் | 959,167 | 1,104,893 |
| மாறும் காசு | 7,914 | 15,027,593 |
| இலங்கை வங்கி நடைமுறை கணக்குகள் | 119,169,001 | 24,200,953 |
| இலங்கை வங்கி - அழைப்பு வைப்புக்கள் | 191,169,876 | 30,361,209 |
| கூட்டுத்தொகை | **311,305,958** | **70,694,648** |

15. பங்களிக்கப்பட்ட மூலதனம்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| இலங்கை அரசாங்க நிதியம் | 25,584,808 | 25,584,808 |
| வன பாதுகாப்பு திணைக்களத்தினால் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்கள் | 10,714,815 | 10,714,815 |
| உலக வங்கி உதவிகள் | 708,202 | 708,202 |
| கனேடிய மற்றும் பிரித்தானிய உதவிகள் | 4,495,843 | 4,495,843 |
| கூட்டுத்தொகை | **41,503,668** | **41,503,668** |

16. ஊழியர் கடன் சுழல் நிதியம்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் மீதி | 225,543,133 | 218,784,628 |
| ஊழியர் கடன் வட்டி கிடைத்தல் | 5,102,915 | 7,582,768 |
| வருடத்தினுள் செய்யப்பட்ட சரிப்படுத்துகைகள் | (91,708) | (824,263) |
| வருட இறுதியில் மொத்த மீதி | **230,554,340** | **225,543,133** |
| திசெம்பர் 31ஆந் திகதியில் பயன்படுத்தப்பட்ட நிதியத்தின் பெயரளவிலான பணமதிப்பு | 196,135,203 | 200,043,003 |
| திசெம்பர் 31ஆந் திகதியில் பயன்படுத்தப்படாத நிதியம் | **34,510,845** | **26,324,393** |

17. ஓய்வு'தியப் பணிக்கொடை

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் மீதி | 340,599,947 | 367,895,815 |
| வருடத்திற்கான ஏற்பாடுகள் | 123,790,345 | 639,601 |
| வருடத்திற்குள் கொடுப்பனவுகள் | (28,459,149) | (27,935,469) |
| வருட இறுதியில் மீதி | **435,931,143** | **340,599,947** |

ஓய்வு'தியப் பணிக்கொடைக்கான பொறுப்புக்கள் மதிப்பீட்டின் போது 1983இன் இல 12ஐக் கொண்ட ஓய்வு'தியப் பணிக்கொடைச் சட்டத்திற்கு இணங்க தொடர்ச்சியாக 5 வருடங்களுக்கு மேலாக சேவைக்காலத்தினைப் பு'ர்த்தி செய்த ஊழியர்கள் பணிக்கொடையினைப் பெற உரித்துடையராவர். மேற்படி பணிக்கொடையினைப் பெறுவதற்குப் பின்வரும் முக்கிய கணிப்புக்கள் பயன்படுத்தப்பட்டன.

| | 2014 | 2013 |
|---|---|---|
| விலைக்கழிவு வீதம் | 7.05% | 10.64% |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம | 5% | 5% |
| ஊழியர் புரள்வு வீதம் | 2.77% | 4.67% |
| ஓய்வு'தியம் பெறும் வயது (வருடங்கள்) | 60 | 60 |



18. வரி அறவிடல்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் மீதி | 88,581,787 | (29,473,329) |
| வைப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வரி | (30,153,705) | (13,827,648) |
| வருடத்திற்குள் கொடுப்பனவுகள் | (30,819,565) | - |
| வரிகளுக்கான குறைநிறைப்பு ஒதுக்கீடுகள 2013 | 2,237,777 | - |
| வருடத்திற்கான ஒதுக்கீடுகள் | 202,347,540 | 131,882,763 |
| வருட இறுதியில் மீதி | **232,193,834** | **88,581,787** |

19. கடன்கொடுத்தோர் மற்றும் சேரும் செலவுகள்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியம் | 14,086,637 | 12,964,959 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 1,698,070 | 1,555,815 |
| சேரும் செலவுகள் | 128,298,983 | 170,814,175 |
| மீளளிக்கவேண்டிய விலைமனு வைப்புக்கள் | 11,862,050 | 6,566,130 |
| பிணை வைப்புக்கள் - பணிக்குழாத்தினர் தவிர | 33,239,095 | 30,033,745 |
| செலுத்தவேண்டிய கணக்காய்வு கட்டணங்கள் | 3,073,028 | 2,323,028 |
| வாடிக்கையாளரின் வைப்புக்கள் | - | 10,400 |
| தடுத்து வைக்கப்பட்டள்ள பணம் | 13,969,943 | 10,118,269 |
| ஏனைய கடன்கொடுத்தோர் | 165,386,186 | 43,223,330 |
| உரிமைப்பங்கு- வன பாதுகாப்பு திணைக்களம் | 964,283,581 | 661,562,629 |
| உரிமைப்பங்கு- வன ஜீவி திணைக்களம் | 388,363 | 335,619 |
| கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரி | 23,510,868 | 22,168,086 |
| கூட்டுத்தொகை | **1,359,796,803** | **961,676,185** |

## நிதிக் கலைச்சொற்கள்

1. கணக்கியற் கொள்கைகள்
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மற்றும் முன்வைக்கும் போது பயன்படுத்தப்படும் விசேட மூலக்கோட்பாடுகள், அடிப்படைகள், நியமங்கள், சட்டங்கள், மற்றும் செயல் நெறிகள்.

2. தவணைமுறைக் கடன் கரைப்பு
அருவச்சொத்துக்களை அதன் விளைபயன்மிக்க ஆயுகாலத்திற்குள் முறையாகப் பகிர்ந்தளித்தல்.

3. சேரும் செலவு
வருமானம் மற்றும் செலவினங்களின் கிடைப்பனவு அல்லது கொடுப்பனவுக் காலஅளவைக் கவனத்திற் கொள்ளாது, ஒன்றையொன்று செம்மைப்படுத்தும் மூலக்கோட்பாடு.

4. பணம் மற்றும் பணத்திற்கு சமமான சொத்துக்கள்
3 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான காலப்பகுதியில் முதிர்ச்சியடையும் திரவத்தன்மையான முதலீடுகள்.

5. வருமான ஒதுக்கீடுகள்
முதலீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள்

6. பெறுமதி கூட்டல்
கூட்டுத்தாபனத்தினால் அதன் செயற்பாடுகளின் மீது உருவாக்கப்பட்ட பணத் தொகை

7. செயற்படு சுட்டுகள்
நடைமுறை பொறுப்புக்களிலிருந்து நடைமுறை சொத்துக்களைப் பிரிக்கும் போது கிடைப்பவை.

8. பெறுமானத் தேய்வுகள்
சொத்தொன்றின் தேய்வடையக்கூடிய பெறுமானத்தை அதன் விளைபயன்மிக்க ஆயுகாலத்திற்குள் முறையாகப் பகிர்ந்தளித்தல்.

9. முடுக்கிவிடுதல்
ஈடுபடுத்திய மூலதனத்திற்கு கடன் பெற்ற தொகை

10. சாதாரண பெறுமதி
அறிவுள்ள ஆதரவுமிக்க இரு தரப்பினரிடையே தூரத்தில் இருந்தவாறு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகையில் சொத்தொன்றை பரிமாற்றம் செய்யக்கூடிய பெறுமதி

11. சொத்துக்கள் மீதான வருவாய்
தேறிய வருமானத்தை மொத்த சொத்துக்களின் வீதமாகக் காட்டுதலாகும். இது இலாபத்தை அளவிடும் மற்றும் நிகரான வேறு நிறுவனங்களுக்கிடையில் செயலாற்றுகையை ஒப்பிடும் அளவீடாகப் பயன்படுத்தப்படும்.

12. பிற்போடப்பட்ட வரி
தற்போதைய கணக்கியற் கொள்கைகள், வரிசார் கொள்கைகளில் இருந்து வேறுபடுவதனால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் ஆகும்.

